GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY. NOV 1914

கடவுள் துணை.

# செந்தமிழ்

தொகுதி-கஉ.] ஆனந்தஸூ ஆவணிமீ [பகுதி-கய.
Vol. XII. August—September. 1914. No. 10.

## பஞ்சாயமுதலியசங்கங்களின் பழமையும், முறைமையும்.

பஞ்சாயஸ்தாபனவிஷயமானபரியாலோசனையில் ராஜகார்யதுரந்தரரிற்சிலர் இத்தமிழ்நாட்டில் முற்காலத்தில் பஞ்சாயத்தால் ராஜ்ய கார்யமொன்றும்நடந்துவந்திருப்பதில்லையென்றும், மற்றுஞ்சிலர் சங்கமென்றசொல்லே தமிழ்ச்சொல்லல்லாமையால் முற்காலத்திற் றமிழ்ச் சங்கங்களிருந்தனவாகச்சொல்லுவதற்குத் தக்கஆதாரங்களில்லையென்றும், அபிப்பிராயப்படுவதால் அவற்றின்உண்மையைப் பழையதமிழ் நூல்களிலிருந்து எடுத்துக்காட்டினால் உண்மையுணர்வார்களுக்கு உபகாரமாகுமென்றுநினைத்து இஃதெழுதப்பெறுவதாயிற்று.

பஞ்சாயம் என்னும்பெயர், இலக்கியங்களிற்புலப்படவில்லையாயினும், 'இவ்வழக்குப் பஞ்சாயத்திலிருக்கிறது' 'அவன்வழக்கைப் பஞ்சாயத்தார்தீர்த்துவிட்டார்கள்' என உலகவழக்காய்வழங்கப்பட்டுவருகிறது. இப்பெயரை அத்துச்சாரியையகப்படப்பிரித்து 'பஞ்சாயத்து' எனக் குற்றியலுகரவீற்றுப்பெயர்போலச் சிலர்மயங்கிவழங்குவதுமுண்டு.

இப்பெயரிலுள்ள பஞ்ச என்பது ஐந்து என்னும் பொருளையும், ஆயம்*என்பது மக்கட்கூட்டம் என்னும்பொருளையும் உணர்த்துவனவாம். ஆகவே பஞ்சாயம் என்பது ஐந்துவகையானசபைக்குப்பெயராகுமெனவிளங்குகின்றது.

---

* ஆயம் மக்கட்கூட்டத்தின்பெயரென்பதை "ஒரையும்பண்ணையுமாயமுங்குழுவுங், கூறும்பமாதோமக்கட்கூட்டம்" என்னுந் திவாகரத்தாலுணர்க.

இச்சபைகள், சிலப்பதிகாரத்துள் " அரசொடுபட்டவைம்பெருங் குழுவும்", "ஐம்பெருங்குழுவுமெண்பேராயமும்" என்னும்அடிகளுள் ஐம்பெருங்குழுவென் றுவழங்கப்பட்டுள்ளன. இவ் ஐம்பெருங்குழு என்பதற்குப் பொருள்விளக்கியஅரும்பதவுரைகாரர், "வேந்தர்க்கு— மாசனம்பார்ப்பார்மருத்தர்வாழ்நிமித்தரோடமைச்சர், ஆசிலவைக்கள த்தாரைந்து" என்பதனுல் "ஐம்பெருங்குழு" இவையென மேற்கோள் காட்டியிருக்கின்றனர். இம்மேற்கோளாற்காட்டப்பட்ட ஐந்துசபை களும் ஐங்குழு (பஞ்ச ஆயம்) எனப்பெயர்பெறுமாதலால் அவற்றுள் முதன்மைபெற்ற "மாசனம்" (மஹாஜனம்) என்னுஞ்சபையை இக் காலத்தார் பஞ்சாயமென உபசாரவழக்காய்வழங்கிவருவது பொருத்த முள்ளதாகவேயிருக்கிறது. இவ்வாறே முகூர்த்தநூல்வல்லார் பஞ்சகம் என்னும்பெயர்பெற்ற ஐந்துவகையானதோஷங்களுள் (தோஷபஞ்ச கங்களுள்) ஒவ்வொன்றையும் பஞ்சகமென்னும்பொதுப்பெயரால் வழங்கிவருவதும் இங்குநோக்கத்தக்கது. இதனுல் பஞ்சாயம் ஐவர் கூடியகூட்டமாயிருக்கவேண்டுமென்னும் நியமமில்லையென்பதும்பெறப் படும்.

ஆயம் என்னுஞ்சொல்லின் அவயவப்பொருளையாராயுமிடத்து «ஆய, [illegible] …துவஸிஸம்» என்னும்பிரமாணங்களால் அறிவுடையோர்கூட்டம் என்பதே இங்குப்பொருத்தமுள்ளதாகும். ஆகவே பஞ்சாயசபை இயற்கையறிவும் நூலறிவுமுடைய பலர்கூடிய மஹாஜனஸபையா யிருந்துவந்ததென்பதும் பெறப்படும்.

அன்றியும், 'சிலப்பதிகாரஅரும்பதவுரைகாரர்காட்டியமேற்கோ ளில் "வேந்தர்க்கு மாசனம்" (மஹாஜனம்) எனவும், அரங்கேற்றுகாதை மூலத்துள், "அரசோடுபட்டவைம்பெருங்குழு" எனவும், இக்குழு அர சர்க்குரியதென விசேடிக்கப்பட்டிருப்பதால் பஞ்சாயம் என்னும் இம் மஹாஜனஸபை முற்காலத்தில் அரசருக் கின்றியமையாததுணையாய் அவரா லாதரிக்கப்பட்டிருந்ததென்பது வெளியாகின்றது.

இன்னும், " அரசொடுபட்டவைம்பெருங்குழுவும்" "ஐம்பெருங் குழுவுமெண்பேராயமும்" என்னு மடிகளில் ஐங்குழுவென்றுெழியாது

"ஐம்பெருங்குழு" என்றுவிசேடிக்கப்பட்டமையால் அவை கிளைச்சபைகளையுடையனவாயிருந்தனவென்பது பெறப்படும்; பெறவே, பஞ்சாயங்கள் தம்முள் ஒன்றற்கொன்று கிளைச்சபை முதற்சபைகளையுடையவாயிருந்துவந்திருக்கவேண்டுமென்பதுவெளிப்படையாம்.

அன்றியும், "மாசனம்" (மஹாஜனம்) என்னும் சிறப்புப்பெயர்ப் பொருளைநோக்குங்கால் பஞ்சாயத்தின்அங்கத்தினரெல்லாம், பெருமையுடைமைக்குரிய கல்வி, அறிவு, ஒழுக்கம், குடிப்பிறப்பு, செல்வம், நடுவுநிலைமைமுதலிய பலநற்குணங்களுமுடையராய்த் தெரித்தெடுக்கப் பெற்றுவந்திருக்கவேண்டுமென்றுந் தோன்றுகின்றது.

இதுகாறும் சிலப்பதிகாரத்திற்கண்ட "அரசொடுபட்ட ஐம்பெருங் குழுவும்" "ஐம்பெருங்குழுவுமெண்பேராயமும்" என்ற அடிகளிலுள்ள ஐம்பெருங்குழுவென்றசொற்றொடரையும், அரும்பதவுரைகாரர்காட்டிய "மாசனம்பார்ப்பார்" என்னும் மேற்கோளிலுள்ள மாசனமென்னும்பெயரையுங்கொண்டாராய்ந்தவாற்றால் இத்தமிழ்நாட்டில் ஆயிரக் கணக்காயுள்ளவருடங்கட்குமுன்னமே பஞ்சாயஸ்தாபனமுண்டென்பதும், அது அரசர்க்குத்துணையாய் அவராலாதரிக்கப்பட்டிருந்ததென்பதும், அறிவான்முதிர்ந்தமேன்மக்களே அதற்குரியஅங்கத்தினராயிருந்தனரென்பதும், அதற்குக் கீழும் மேலும் முறையே கிளைச்சபை முதற்சபைகளிருந்தனவென்பதும், அச்சபைகள் ஐவர்கூடியகூட்டமாகவேயிருக்கவேண்டுமென்னும் நியமமில்லையென்பதும், இன்னும் இவற்றோடொத்த "பார்ப்பார்" முதலியபிறசபைகளுமிருந்தனவென்பதும் ஒருவாறுகுறிப்பித்துணர்த்தலாயிற்று.

இனி, இவ்விஷயங்களைச் சரித்திரவாயிலாகப்பார்க்குமிடத்துப் பெரியபுராணத்துள், தடுத்தாட்கொண்டபுராணத்தாலும், திருவிளையாடலுள் மாமனுய்வந்துவழக்குரைத்ததிருவிளையாடலாலும் விளங்கக் காணலாம். பிறநூல்களுள்ளுமுள்ள பற்பலகுறிப்புகளாலுங் காணலாம். அவையெல்லா மிங்குவிரித்துரைப்பிற் பெருகுமாதலால் அவற்றுட் சில முக்கியமானகுறிப்புகளைமட்டும் இங்குக் காட்டிமுடிப்போம்.

---

(இன்னும் வரும்.)

திரு. நாராயணையங்கார்,
பத்திராதிபர்.

உ

சிவமயம்.

# இலங்கைத்தமிழரசர்*

—:o:—

கௌரவம்வாய்ந்த அக்கிராசனாதிபதியவர்களுக்கும், மகத்துவம் வாய்ந்த ராஜா அவர்களுக்கும், மற்றைவித்துவான்களுக்கும் நமஸ்காரம்.

இலங்கை தென்னிந்தியாவோடுசம்பந்தமுடைய ஒருநாடாயிருந்து பின்னிகழ்ந்தகடற்பெருக்கினாற் பிரிக்கப்பட்டு இப்போது வேறாயிருக்கின்றது. இதனை ஐரோப்பியபண்டிதரும் அங்கீகரிப்பர். இலங்கையில் அரசுசெய்த அரசர்கள் இவரிவரென்றும், அவர்செயல்கள் இவையிவையென்றும் விரித்துச்சொல்லுதற்குத் தக்கசான்றுகள் அகப்பட்டில. ஆயினுந் தெரிந்தவரையிற் சிலசில கூறுதும்.

ஏறக்குறைய ௨௪௫0 வருடங்களுக்குமுன்னே மகததேசராசகுமாரனாகிய விசயனென்பவன் ௭00 சனங்களோடும் இங்கேவந்து இலங்கையரசனாய்ப் பலவ்ருடம் அரசுசெய்தான். அவனுக்குமுன்னே இலங்கையரசர்களாயிருந்தவர்கள் திராவிடரெனப்படுவார். இயக்கர், நாகர் என்பாருந் திராவிடரே. இவ்வுண்மை திருக்கேதீச்சுரம், திரிகோணமலைமுதலிய சிவாலயங்களாலும், மட்டக்களப்புமுதலிய இடங்களிற்காணப்படும் பண்டைவழக்கங்களினாலும், பிறவற்றாலுந் துணியப்படும்.

பௌத்தகுருமாரால் எழுதப்பட்ட "மகாவமிசம்" என்னும் நூலிலே இலங்கையரசர் பலருடையசரித்திரம் கூறப்பட்டிருக்கின்றது. இவருள்ளே சிங்களவரசர்சரித்திரமும் பௌத்தமதவிஷயமும் விரித்துக்கூறப்பட்டிருக்கின்றன. சிலசில தமிழரசர்சரித்திரமுஞ் சுருக்கிக்கூறப்பட்டிருக்கின்றது. அவ்வரசராவார் இந்தியாவினின்றும் இங்கேவந்த சேனன், குத்திகன், ஏலேலசிங்கன், பாண்டு, பாரிந்தன் முதலியோர்.

இவருள்ளே ஏலேலசிங்கனைப்பற்றி மகாவமிசம் சற்றேவிரித்துக் கூறும். இவனுடைய இராசதானி அநுராஜபுரம். இவன் மனுச்

---

*இது மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் பதின்மூன்றாம்வருஷக்கூட்டத்தில், வாசிக்கப்பெற்றது.

சக்கரவர்த்திபோல நீதியிற்சிறந்தவன். தனது தேர்ச்சில்லிலே ஒரு பசுக்கன்று அகப்பட்டிறத்தலை நோக்காது பராமுகமாகத் தேர்செலுத்திவந்ததன்மகனை அந்தப் பசுக்கன்றின்பொருட்டு, ஆராய்ச்சிமணியை வாயாற்கவ்வியடித்துத் தனக்கறிவித்த தாய்ப்பசுவின்முன்னிலையிலே தேர்ச்சில்லின்கீழேவிழுத்திக்கொன்றவன். புலவர்பாடும்புகழுடையனும் பலகவிமாலைகளுஞ் சூடப்பெற்றுப் பரிசிலுங்கொடுத்த வள்ளல். தனதுதேர்நுகந்தாக்கிச் சற்றே இடிந்த ஒருபௌத்தமடச்சுவரின்பொருட்டுப் பெருந்தொகைப்பொருள்கொடுத்தவன். பின்னர் அநுராசபுரத்திலே "துட்டகைமுனு" என்னுஞ் சிங்களவீரனுற் கொல்லப்பட்டுச் சமாதிக் கட்டடமும் பெற்றுன்.

இவனுக்குப்பின்னும் பலர் இங்கேவந்து இலங்கையரசர்களாயினர். இவரெல்லாம் பௌத்தமடங்களையும், சமாதிகளையும் அழித்துப் பௌத்தமதவிரோதிகளாய்நடந்தமையால் இவர்சரித்திரம் அங்கே விரித்துக்கூறப்படவில்லை. பாண்டிய சோழமன்னர்களுள்ளும் பலர் இங்கேவந்து இலங்கையரசர்களாயினர். பொல்லனுவரை என்னும் இடத்திலிருந்து அரசுசெய்த சோழமன்னராற் கட்டப்பட்ட சிவாலயங்களும், வைஷ்ணவாலயங்களும் கிலமாகி இப்பொழுதுங்காணப்படுகின்றன. அங்கேகிடந்த நடேசவிக்கிரகம்முதலியன இப்போது கொழும்பிலுள்ள நூதனசாலையிலேவைக்கப்பட்டிருக்கின்றன. இப்படியே பின்னும் பலர் அரசுசெய்தபின் ஆரியசக்கரவர்த்திகள் இலங்கையிலே யாழ்ப்பாணத்திலேவந்து அரசுசெய்தார்கள். இவர்களுக்கு இராசதானி நல்லூர். இவர்களும் இவர்கள்சந்ததியாரும் அரசியற்றுங்காலத்திலே சைவசமயத்தையுந், தமிழ்க்கல்வியையுஞ் செவ்வே பரிபாலித்தார்கள். சைவாலயம், வித்தியாசாலை, வைத்தியசாலை, அன்னசாலைமுதலியவைகளையுந்தாபித்துநடாத்தினுர்கள். இவர்கள் சரித்திரம் ஸ்ரீமத்-ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையவர்களுடைய யாழ்ப்பாணச்சரித்திரத்திலே விரிவாகக் காணப்படும்.

இவருள்ளே கூழங்கைச்சிங்கையாரியச் சக்கரவர்த்தி தொண்டைமண்டலம், சோழமண்டலம்முதலிய இடங்களிலிருந்து பிராமணகுருமாரையும், வேளாளரையும், பிறரையும் கொண்டுவந்து யாழ்ப்பாணத்திலே பலவிடங்களிலும் குடியேற்றினுன். கைலாசப்பிள்ளையார்கோவிலையுங் கட்டுவித்தான். இவர்கள் பெயரும், வரலாறும் முத்துராச

கவிராசர் இயற்றிய "கைலாசமாலை" என்னும் நூலிலே விரித்துக் கூறப்பட்டிருக்கின்றன.

கனகசூரியச் சிங்கையாரியச்சக்கரவர்த்தியின்புத்திரராகிய பரராசசேகரன், செகராசசேகரன் என்னும் இருவரும் முறையே பட்டத்தரசும், இளவரசுமாய் அரசியல்நடாத்துங்காலத்திலே செய்த நன்மைகளுக்கு அளவில்லை. இவர்கள் இருவரும் இந்தியாவிற்சென்று பலவிதமானகல்விகளுங்கற்றவர்கள். தமிழ்க்கல்வியிலுஞ்சிறந்தவர்கள். அங்கங்கே பாடசாலை, வைத்தியசாலை, அன்னசாலை முதலியவைகளையுந்தாபித்துநடாத்தினார்கள். நல்லூரிலே ஒரு தமிழ்ச்சங்கந்தாபித்து இந்தியாவினின்று புலவர்களை வருவித்து அவர்களோடு ஈழமண்டலப் புலவர்களையுஞ்சேர்த்துத் தமிழ்விருத்திசெய்தார்கள். பலவிடங்களினுமிருந்து வடமொழி தென்மொழிநூல்களைவருவித்துப் புத்தகசாலையையுந்தாபித்தார்கள். பண்டிதர்களைக்கொண்டு பல நூல்களையுஞ் செய்வித்தார்கள். பரராசசேகரமஹாராஜா காளிதாசமஹாகவி செய்த இரகுவமிசத்தைத் தமிழிலே சிறந்தகாப்பியமாகச்செய்வித்தான். இந்நூல், திருவாரூர்ச்சங்கத்திலும் அரங்கேற்றப்பட்டது. இந்நூலாற் பரராசசேகரன்புகழ் இன்றும் விளங்குகின்றது. பரராசசேகரம் என்னும் வைத்தியநூலும், செகராசசேகரம் என்னும் சோதிடநூலும் இவர்களால் எழுந்தவை. இவர்கள் செய்த கல்விவிருத்தி இன்னும்பல.

பரராசசேகரன் கவிபாடி இங்குவந்த களத்தூர் முத்தமிழ்க்கவிவீரராகவமுதலியாருக்குப் பொற்பந்தம், யானை முதலிய பரிசுங்கொடுத்து முதலியார்மேற் புகழ்க்கவியுங்கூறினன். அக்கவிகளிற் சில "தமிழ்நாவலர்சரிதை" என்னும் நூலிற் சேர்க்கப்பட்டிருக்கின்றன. பரராசசேகரன் முதலியார்மேற்பாடியகவிகளையும் இங்கே காட்டுதும்.

### கட்டளைக்கலித்துறை.

"இன்னங்கலைமகள்கைம்மீதிற்புத்தகமேந்தியந்தப்
பொன்னம்புயப்பள்ளிபுக்கிருப்பாளென்ன புண்ணியமோ
கன்னன்களந்தைக்கவிவீரராகவன்கச்சியிலே
தன்னெஞ்சமேடெனக்கற்றுரைதருமுத்தமிழையுமே"

## விருத்தம்.

“விரகன்முத்தமிழ்வீரராகவன்
வரகவிமாலையைமதிக்கும்போதெலாம்
உரகனும்வாணனுமொருங்குதோன்றிநூற்
சிரகரகம்பிதஞ்செய்யலாகுமே”

இவையன்றித் திருவாரூருலாவுக்குப் பரராசசேகரன்கூறியபாயிரமுமுண்டு. இவன்புத்திரர்காலத்திலே அரசியல் போர்த்துக்கேசருக்காயிற்று.

பின் கண்டிமாநகரிலே அரசனாயிருந்து ஆங்கிலேயராற்பிடிபட்டு வேலூர்க்கு அனுப்பப்பட்ட விக்கிரமசிங்கனுந் தமிழரசனேயாம். இவன் மரபினர் இன்றுமுளர்.

இச்சரித்திரம் இங்கிலிஷ்பாஷையிற் பலராலும் எழுதப்பட்டிருத்தலால் இங்கே அக்கிராசனாதிபதியாய் வீற்றிருக்கும் ஸ்ரீமான்-இராமநாதத்துரையவர்கள்போன்ற ஆங்கிலம் முதலியபாஷைகளை நன்கு கற்றபண்டிதர்களே பெரிதும் அறிவர். அவர்கள் என் வியாசத்துள்ள குறைகளையுந் திருத்திக்கூறல் நன்று.

## வாழி.

தலைமைசே ரக்கிரா சனபதி வாழி
புலமைசே ரிச்சபைப் புலவோர் வாழி
செந்தமிழ் வாழி சீரிய
சந்திர சேகரன் றன்னருள் பெற்றே.

---

இங்ஙனம்,

அ. குமாரசுவாமிப்பிள்ளை,

சுன்னாகம்.

# தேகஆராய்ச்சி.

"செந்தமிழ்" (தொகுதி கஉ பகுதி எ-ல்) உசருஎ-ம்பக்கத் தொடர்ச்சி.

———:(o):———

## குளிர்ஜ்வர நிவாரணம்.

மேனாட்டுவைத்யசிரோமணிகளிற்சிலர், தங்கள்வாழ்நாளையெல்லாம், இவ்வியாதியை உண்டுபண்ணும் ஜீவாணுக்களை இடைவிடா முயற்சியாற் கண்டுபிடிப்பதிற்செலவழித்து அவைகளின்ஜீவசரித்திரங்களையும் ஜீவாவஸ்தைகளையும் ஆராய்ந்து அறிந்து உலகத்தில் இவ்வியாதியாற்சீர்குலையும் மனிதவர்க்கங்களை உய்விக்கும்பொருட்டு இதன் நிவாரணங்களை நன்குதெரிந்தெடுத்துள்ளார். "பரோபகாரரார்த்தமிதஞ்சரீரம்" என்னும்வாக்யப்படி உலோகோபகாரார்த்தமாக இவ்வரும்பிரயாசையை எடுத்துக்கொண்டார்களேதவிரச் சுயலாபத்தை இச்சித்தல்லவென்பது மிகவும்தெளிவாய்விளங்கற்பாலது.

இம்முயற்சியின்பயனையறிந்தே நமது ஆங்கிலேயதுரைத்தனத்தார் பலவிதஏற்பாடுகளைச்செய்து இவ்வியாதியை நிவாரணம்செய்துவருகின்றார்கள். இவ்விதநிவாரணம் இரண்டுவகைப்படும் (1) வராமற்றடுப்பது. (2) வந்தபின்போக்குவது. இவற்றுள், வராமற்றடுப்பதுவே மேன்மையாயினும் எல்லாஜனங்களாலும் இதையனுஷ்டிக்கமுடியாது.

### (1) வராமற்றடுப்பது.

குளிர்ஜ்வரமுண்டாவதற்கு மூன்றுஜீவிகள்வேண்டுமென்றும், அவற்றுள் ஒன்றில்லையாயினும் ஜ்வரமுண்டாகாதென்றும் முன்னமே கூறப்பட்டிருக்கின்றது. இம்மூன்றுஜீவிகளில் பரமாணுப்பிரமாணமான அதிருசிய ஜ்வரஜீவியையறிந்து நாசஞ்செய்வது எளிதல்ல. இவை மனுஷ்யதேகத்திலோ கொசுகின்றேகத்திலோ அபிவிர்த்தியாகும்பொழுது அவ்வவஸ்தையைத்தெரிந்து நாசஞ்செய்யவேண்டியதாயிருக்கிறது. மனுஷ்யதேகத்தில் அவற்றை நாசஞ்செய்வதைக்குறித்து (2) "வந்தபின்போக்குவது" என்னும்நிவாரணத்தைக்குறித்து விவரிக்கும்போதுகூறப்படும்.

கொசுகின்றேகத்தில் அபிவிர்த்தியாகுபவை கொசுகைவதைத்தால் நசித்துவிடும். ஆனால் ஜ்வரத்தாற்பீடிக்கப்பட்டுவருந்தும் மனுஷ்யவர்க்கங்களைத் தெரிந்துகொள்வதுபோல் ஜ்வரஜீவிவசிக்கும் கொசுகுகளைக் கண்டறிவது சுலபமல்லாததால், கொசுகுவர்க்கங்கள் நாம்வசிக்கும் கிருகங்களிற்புகுந்து நம்மை ஹிம்சைசெய்ய அணுகாமற்றடுப்பதும் அணுகில் அவற்றை எவ்விதத்திலாவது வதைப்பதும் ஒருமுறை.

கொசுகுவரினும் அது நம்மைக்கடிக்காதிருக்கும்படி நாம் நந் தேகத்தை இரக்ஷித்துக்கொள்வது மற்றொருமுறை.

அவை ஜ்வரத்தாற்பீடிக்கப்பட்டவர்களைக்கடித்து ஜ்வரஜீவியை உட்கொண்டு அபிவிர்த்தியாகச்செய்து, பிறகு தேகாரோக்யமுடையோரைக்கடித்து அவர்களுக்கும் ஜ்வரத்தையுண்டுபண்ணுவதால் ஜ்வரத்தாற்பீடிக்கப்பட்டவர்களினின்றும் தேகாரோக்யமுடையவர்களை அகலஅகற்றுவது வேறொருமுறை.

நமதுதேகத்தில் ஜ்வரஜீவிகள்பிரவேசித்தாலும் அவை நமக்குத் தீங்குவிளைவிக்காதிருக்கும்படி நமது இரத்தத்தைச்சுத்தப்படுத்திக் கொள்ளுவது நான்காவதுமுறையாகும்.

கொசுக்களை நாசஞ்செய்யமுயலவேண்டுமேல் அவற்றின்ஜீவசரித்திரங்களை ஆராய்ந்தறியவேண்டுவது அவசியம்.

நமதுவீடுகளிலும் மரம் செடி புல்முதலிய சஸ்யவர்க்கங்களிலும் கொசுகுகள் பகலெல்லாம் வசித்திருந்து இரவில் நம்வாஸஸ்தலங்களையணுகி நம்மைக்கடித்து ஹிம்சிப்பதை அறிந்திருக்கிறோம். இவை இரவில் மனுஷ்யரத்தத்தைப்புசிக்கவருவதால், பகலில் நமது திருஷ்டிக்குப்புலப்படாவண்ணம் போய்விடுகின்றன. இதில் இன்னுமொரு விசேஷமுண்டு. நமது இரத்தத்தை இச்சிப்பது பெண்கொசுகேயன்றி ஆண்கொசுகல்ல. ஆண்கொசுகு, மடிந்து அழுகிப்போனமாம்சம் இலை முதலியவற்றைப்பக்ஷித்து ஜீவிக்கின்றது. பெண்கொசுகோ மனிதன் விலங்குமுதலியபிராணிகளின் ரத்தத்தையேபருகி உயிர்வாழ்கின்றது. ஆகவே, இப்பெண்கொசுகு இரவில் இர்த்தபோஜனமருந்திப் பகலில், தன்இனம்பெருக்கத் தனக்கனுகூலமானவிடங்களிற்சென்று முட்டையிடப்போகின்றது: இவ்விடங்களாவன :—குட்டைகள், குளங்கள்,

சிறியஜலாதாரங்கள், சேறும்நீருங்கலந்துநிற்குமிடங்கள், பாத்திரங்கள் சுத்திசெய்தோ ஸ்நானஞ்செய்தோவீட்டினருகிலோடும் நீர்த்தாரைகள் புல்லும் செடியு முள்ளதாய் நீரோடிக்கொண்டிருக்கும்வாய்க்கால்கள் முதலியவையே. இவற்றிற்சென்று முட்டையிட்டுப்போய்விடுகின்றது. முட்டைகளைக்காப்பாற்ற அங்குக் கொசுகு நிற்பதேயில்லை. இம் முட்டைகள் சிலமணிநேரத்திற்குள், சிறியஜீவிகளாய்ப் புழுப்போல் நீரில் அங்குமிங்கும் குதித்துவிளையாடுவதும், ஜலத்தினுள்முழுகுவதும் சுவாசம் உட்கொள்ள ஜலத்தின்மேற்கிளம்புவதுமாயிருக்கும். இக் கொசுப்புழுக்கள் $\frac{1}{4}$ அங்குலநீளமும் இரண்டும்மயிரிழைப்பருமனுமாய் ஒருபக்கத்திற் சிறியதலையும் மற்றப்பக்கத்திற் கூர்மையானவாலும் உடையனவாயிருப்பதால் அவற்றைக் கண்டுகொள்வது சுலபமாயிருக் கும். கொஞ்சநாட்சென்றபிறகு கோல்போன்றபுழுத்தேகம்நீங்கிக் கூன்முதுகுடைய நீர்ப்பூச்சியாய்க் கொசுப்புழுக்களைப்போல் நீரில் விளையாடிக்கொண்டிருந்து ஒன்றிரண்டுநாள்களுக்குள், பூச்சிவடிவா யிருந்ததைவிட்டுக் கொசுகுவடிவாய்ச் சிறிதுநேரம் ஜலத்தின்மேல் நின்று இளைப்பாறிப் பிறகு இரைதேடுவதற்காகப் பறந்துபோய் விடும்.

இப்படி உற்பவமாகும்கொசுக்கள் பலவகையாயிருக்கின்றன. குளிர்ஜ்வரம்விளைவிக்குங் கொசுவகைகள்கூடப் பலஜாதிகளாயிருக்கின் றனவென்று கூறப்படுகின்றது. நாம் அவசியமாகத்தெரியவேண்டியவை இரண்டுவகைக்கொசுக்களே. 1. குளிர்ஜ்வரமுண்டாகக்காரணமானவை (அனோபிலிஸ்) 2. யானைக்கால்நோய், அண்டகோசப்பெருக்கநோய் முதலிய வியாதிகளுண்டாகக்காரணமானவை. (கூலெக்ஸ்),

---

(தொடரும்.)

V. S. அருணாசலம்பிள்ளை,

S. A. S.

# ஈழமண்டலப்புலவர்.*

—:(o):—

குலம் கல்வி சீலம் செல்வம் பரோபகாரம் அதிகாரமுதலியவற்றாற் சிறந்துவிளங்கும் கௌரவ அக்கிராசனாதிபதியவர்களுக்கும், பன்னலந் திகழத் தொன்னிலமுஞ் செந்தமிழுங்காக்கும் சேதுபதிமன்னரவர்களுக்கும், அறிவாற்சிறந்தசபையோர்க்கும் நமஸ்காரம்.

மன்னவரவர்க ளாஞ்ஞைசெய்தவிஷயமோ பெரிது. அதற்குத் தந்தகாலமோ சிறிது. அதிலும் சிறியேன் ஆராய்ச்சியோ மிகச்சிறிது. ஆணைமறுத்தலாகாதெனத்துணிந்து இயன்றவாறுசொல்லுகின்றேன். குறைபாராட்டாது உவந்துகேட்குமாறு உங்களைப்பிரார்த்திக்கின்றேன்.

ஈழமண்டலம் எங்குள்ளது? அதுவுந் தமிழ்வழங்கு நிலமோவென ஓராசங்கைநிகழ்தல்கூடும். அதற்கு வேறுபிரமாணம்வேண்டாம்.

தமிழ்நாடு, தன்னகத்தேயுள்ள சேர சோழ பாண்டிமண்டலங்களோடமையாது, சேதுவென்னுந் திருவணைக்கரத்தைநீட்டி ஈழமண்டலத்தையும் அணைத்துக்கொண்டிருக்குங்காட்சி பிரத்தியக்ஷக்காட்சியாம். ஆதலின் ஈழமண்டலம் மற்றை மும்மண்டலங்களுக்கும் சகோதரப்பான்மையுடையதாம். ஈழமண்டலத்தை ஐரோப்பியர்கைக்கொள்ளுமுன்னே ஆதிமுதல் ஆண்டவர்களும் தமிழ்நாட்டரசர்பரம்பரையாரே. ஈழமண்டலத்துமக்களும் தமிழ்நாட்டினின்றும்போந்து குடிகொண்டவர்களே. ஆதலால் ஈழமண்டலமும் ஈழநாட்டுத்தமிழ்மக்களும் தமிழ்நாட்டோடும் என்றுந் தொடர்புடைமை யாவராலும் மறுக்கத்தக்கதொன்றன்று. இத்தொடர்பு எக்காலந்தொட்டுள்ளதென்று வினவுமிடத்து அது பல்லாயிரம்வருஷத்துக்குமுற்றொட்டதெனல்வேண்டும். இற்றைக்கு இரண்டாயிரத்தைஞ்ஞூறுவருஷத்துக்குமுன்னே மகததேசத்தினின்றும்போந்து இலங்கையரசுகைக்கொண்டவிஜயன் கிலமாய்க்கிடந்ததிருக்கேதீச்சரத்தைத் திருத்தினானெனப் பிரிட்டோ என்பவர் இங்கிலீஷிலெழுதிய யாழ்ப்பாணச்சரித்திரங்கூறுகின்றது. மனுநீதிகண்டசோழன் மகன்மகனாகிய குளக்கோட்டரசன் கலியுகம் 512 இடபமாசம் 10உ திங்கட்கிழமை திரிகோண

* இது மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் பதின்மூன்றாம்வருஷக்கூட்டத்துக்கு வந்த உபந்நியாசபத்திரம்.

மலைச்சிவாலயத்தைச் சீரணோத்தாரணஞ்செய்தானெனச் சிலாசாசனங்கூறுகின்றது. விஜயன்வந்து அரசுநிலையிட்டகாலத்துக்குப் பன்னெடுங்காலத்துக்குமுன்னே மாதோட்டத்தில், தமிழர் அரசுநிலையிட்டிருந்தார்களென 1848ஆமாண்டு ராயல் ஏஷியாட்டிக் சொசைட்டிப்பத்திரிகை சவிஸ்தாரமாகநாட்டியிருக்கின்றது. திருக்கேதீச்சரமிருக்கும் மாதோட்டநாடு ஆதியில் நாகத்துவீபமென வழங்கிவந்தது. அது நாகராஜாக்களுக்குப் புராதனராஜதானி. இவ்வுண்மை அக்ஸ்போட் பாளிடெக்ஸ்ட்சொசைட்டியார்வெளியிட்ட மகாவம்சம் என்னும்நூலினாற் றுணியப்படும். நாகராஜாக்களும் தமிழரும் ஒற்றுமையுடையராயிருந்தார்களெனத் துணிதற்குப் போதுமானசான்றுகளுள. இம்மாதோட்ட நாட்டுக்கரைக்கு எதிர்க்கரையிலேயுள்ளது செந்தமிழ்ப் பாண்டிநாடு. தலைச்சங்கமிருந்த தென்மதுரையும் மாதோட்டநாட்டுக்கு எதிர்க்கரையிலே சமீபத்திலிருந்ததாகற்பாலது. தலைச்சங்கத்திலிருந்தபுலவர்களுள்ளே முரஞ்சியூர் முடிநாகராயரும் ஒருவரன்றோ. முடிநாகராயருடைய ஜனனவூர் முரஞ்சியூர். இப்பெயரிய ஒருசீறூர் மாதோட்டப்பகுதியிலேயுள்ளதாகக்கூறுவர். அஃதிந்நாள் முசலியென வழங்குகின்றது. நாகராயரென்றது முடிநாகராயரென அடைகொடுத்துக்கூறுவதால் அவர் முடிபுனைந்து நாகர்நாடாண்ட அரசராதல்வேண்டும். இவ்வேதுக்களால், தலைச்சங்கத்து முடிநாகராயரென்பார் ஈழமண்டலப்புலவராதல்வேண்டுமென்பதும் தலைச்சங்ககாலந்தொட்டு ஈழமண்டலத்திலே தமிழ்வழங்கிவருகின்றதென்பதும் ஒருவாறு துணியக்கிடக்கின்றன. இவ்வபிப்பிராயத்தைவெளியிடவேண்டுமென்னும் ஆசை தூண்டக் கூசாது இப்பேரறிஞர்சபையிலேவெளியிட்டேன். தகாதாயிற் றள்ளுவதும் தக்கதாயிற்கொள்ளுவதும் சபையார்கடன்.

இவருக்குப்பின்னர் ஈழமண்டலத்துள்ள திருக்கேதீச்சரத்தையும் திரிகோணமலையையும்பாடியவர் திருஞானசம்பந்தசுவாமிகள். அவர் காலம் கௌதமபுத்தருக்குமுந்தியகாலம். பெரியபுராணத்திலே சம்பந்தசுவாமிகளை வாதத்தில்வெல்லமுயன்றவர் சாரிபுத்தன் என்னும் தேரனும் அவன்குழாத்தினருமெனக்கூறப்பட்டிருக்கின்றது. மகாவமிசமென்னும் நூலிலே கௌதமபுத்தருக்குமுந்திய அவதாரமாகிய சம்புத்தர்காலத்திலே சாரிபுத்தனென்னுமொருதேரன் மகாநிபுணனாய் விளங்கினனெனக்கூறப்பட்டிருக்கின்றது. சம்புத்தாவதாரம் கௌதம

புத்தாவதாரத்துக்கு இரண்டாயிரம்வருஷத்துக்குமுந்திய அவதார மென்பது பௌத்தர்கொள்கை. ஆதலால், சம்பந்தர்காலம் 4500 வருஷத்துக்குட்படாது. அபிதானகோசத்தில், சம்பந்தசுவாமிகள் காலநிருபணஞ்செய்தபோது இவ்விஷயம் என் ஆராய்ச்சியில் எட்ட வில்லை. ஆயினும் இவ்விஷயம் அதனை வலியுறுத்துகின்றது. ஈண்டைக்கிது மற்றொன்றுவிரித்தலென்னுங்குற்றத்தின்பாற்படுமாயினும் சம்பந்தம்பற்றிக்கூறல் அவசியமாயிற்று. அறிவாணிறைந்த அக்கிராசனபதியவர்கள் பொறுப்பார்களெனநம்புகிறேன்.

அவருக்குப்பின்னர் எடுத்துக்கூறத்தக்கவர் **அந்தகக்கவிவீரராகவனென்னும்** யாழ்ப்பாடி. அவருக்கு ஜன்மநாடு தொண்டைநாடு. அவர் தமதுமனைவியோடுகலாய்த்துப் பரதேசஞ்செல்லப்புறப்பட்டபோது, தொண்டைநாட்டிலிருந்துபோய் இலங்கையில் அரசுசெய்த ஏலேலனுடையபெருவண்மையையும் நீதிநெறியையுங்கேள்வியுற்று மரக்கலமேறி இலங்கைசென்று அரசன்சமுகத்தை அடைந்தார். அரசன் அந்தகர்முகத்தைநோக்கிப் பேசலாகாதெனக்கொண்டு திரைமறைவில்வீற்றிருந்து அவரையுபசரித்து வரவுவினவினான். அதற்கு அவர்,

> "நரைகோட்டிளங்கன்றுநல்வளநாடுநயந்தளிப்பான்
> விரையூட்டுதார்ப்புயன்வெற்பீழமன்னனென்றேவிரும்பிக்
> கரையோட்டமாகமரக்கலஃபோட்டுனைக்காணவந்தாற்
> றிரைபோட்டிருந்தனையேலேலசிங்கசிரோமணியே"

என்னும்செய்யுளைப்பாடி அவன் திரைபோட்டிருந்தசெய்தியையும் தமதுகருத்தையும் விளக்கினார். ஏலேலன் அவரை அகக்கண்ணினாற் சிறந்தவரெனக்கொண்டாடித் திரைநீக்கி எதிரேயிருந்து, அவர்பாடிய பிரபந்தத்தையும் அவருடையயாழைபுங்கேட்டு அவருடைய கல்விச் சாதுரியத்திலும் யாழ்மாதுரியத்திலும் மயங்கி அவர்விரும்பியநாடும் பிறவுங்கொடுத்தான். யாழ்ப்பாடி அவ்வரசன்பாற்பெற்றுத் திருத்தியரசுநிலையிட்டநாடாதலின் பின்னாள் அஃது யாழ்ப்பாணமெனவழங்கப்படுவதாயிற்று.

அந்தகக்கவிவீரராகவனார் இயற்றமிழ் இசைத்தமிழ் இரண்டும் வல்லவர். அவற்றோடு இராஜதந்திரமும்வல்லவர். அவற்றோடு நல்லொழுக்கமும் திடமானசிவபக்தியும் பரோபகாரசிந்தையுமுடையர்

என்பது அவருடையசரித்திரத்தால்விளங்குகின்றது. அவர் நிலையிட்ட யாழ்ப்பாணத்தரசு தான் சிறிதாயினும் 1500 வருஷகாலம்நிலையுற்று இலங்கைமுழுதும் ஒரொருகாலத்தாண்டும், பாண்டிசோழநாட்டரசர்களுக்கு ஒரொருகாலம் படைத்துணையுதவியும் ஓங்கியிருந்தது அவர் கைவிசேஷமும் மாசற்ற மனவிசேஷமுமாம். அவர் யாழ்ப்பாணத்தைப்பெற்றபின்னர்ச் சிலநாளிற் காஞ்சீபுரஞ்சென்று தொண்டைமானைக்கண்டுபேசிக்கொண்டிருக்கையில், அவன் யாழ்ப்பாணநாட்டைத்தவிர வேறுயாது பரிசுபெற்றீரென்றுவினவ, அவர்சொற்றபா இது:—

"இம்பர்வாழேலேலன்றனையேபாடி
என்கொணர்ந்தாய்பாணநீயென்றாள்பாணி
வம்பதாங்களபமென்றேன்பூசுமென்றாள்
மாதங்கமென்றேன்யாம்வாழ்ந்தேமென்றாள்
பம்புசீர்வேழமென்றேன்றின்னுமென்றாள்
பகடென்றேனுழுமென்றாள்பழனந்தன்னைக்
கம்பமாவென்றேனற்களியாமென்றாள்
கைம்மாவென்றேன்சும்மாகலங்கினாளே."

இச்செய்யுளிலேயுள்ள சொற்சிறப்பு, பொருட்சிறப்பு, ஓசைநயம், தொடைநயம், கற்பனாலங்காரம்முதலியவை அவருடைய அளப்பரும் புலமையைவிளக்குகின்றன.

அதுநிற்க, அவரைப்போல அவர்மனைவியாரும் புலமைசிறந்தவர். அவர்பெயர் கற்பகவல்லி. யாழ்ப்பாடி பிரிந்துகூடியகாலத்தில் அவர் பாடியசெய்யுள் இது:—

"முன்னாளிருவர்க்கும்யாக்கையொன்றாகமுயங்கினமால்
பின்னாட்பிரியன்பிரியையென்றாயினம்பேசலுறும்
இந்நாட்கொழுநன்மனைவியென்றாயினமின்னமுமோர்
சின்னாளிலெப்படியோவையநீயின்றுசெப்புகவே."

யாழ்ப்பாடியாகிய அந்தகக்கவிவீரராகவரும்வேறு, இற்றைக்கு 250 வருஷத்துக்குமுன்னிருந்த கவிவீரராகவனும்வேறு; பிந்திய முத்தமிழ்க்கவிவீரராகவனும்வேறு என்பதை அவதானித்துக்கொள்ளல் வேண்டும்.

அவருக்குப்பின்னேகூறத்தக்கவர் சிங்கைஆரியச்சக்கிரவர்த்தி. அவர் யாழ்ப்பாணத்திலிருந்து ஈழநாட்டையாண்ட பிரபல அரசர்.

அவர் கவிபாடுவதிலும் புலவர்களுக்குதவிபுரிவதிலும் பெருவிருப் புடையர். கைலாயநாதரந்தாதிசெய்தவரும் அவரே. தமிழ்ச்சங்கம் யாழ்ப்பாணத்திலேதாபித்து அதற்குக் கிராமங்கள்விடுத்தவரும் அவ் விராஜகவிஞரே. யாழ்ப்பாணத்திற் கைலாயநாதருக்கு ஆலயமும், இராமநாதபுரத்திலிருந்து கங்காதரக்குருக்களைவரவழைத்து அவராற் கும்பாபிஷேகமுஞ்செய்வித்தவரும் அவரே.

அவருக்குப்பின்னே எடுத்துக்கூறத்தக்கவர் **அடியார்க்குநல்லார்.** அவர் குணபூஷணசிங்கைஆரியச்சக்கரவர்த்தியென்னும் ஈழநாட்டர சருக்கு மந்திரத்தலைவராயிருந்தவர். அவர் இயல் இசை நாடகமென் னும் முத்தமிழும்வல்ல உத்தமப்புலவர். அவர்வெட்டியகுளம் ஒன்று இன்றும் அவர்பெயரால்வழங்குகின்றது. அவரிருந்தமனைநிலமும் அவர்பெயரை விளக்குகின்றது. அவருக்குயிர்நட்பினராய்விளங்கினவர் காங்கேயனென்பவர். அவரிருந்தவூர் காங்கேயன்றுறையெனவழங்கு கின்றது. இவ்வேதுக்களாற் சிலப்பதிகாரவுரையாசிரியர் இவ்வடி யார்க்குநல்லாரேயாகற்பாலர்.

அவருக்குப்பின்னர் எடுத்துக்கூறத்தக்கவன் **ஜகராஜசேகரன்.** அவன் யாழ்ப்பாணத்தரசனாகிய பரராஜசேகரன் தம்பி. சிறுவனா யிருக்கும்போது திருக்கோவலூரிலே ஒரு வித்தியாகுருவையடைந்து கல்வித்துறையெல்லாங் கடைபோகக்கற்ற மகாபண்டிதன். யாழ்ப் பாணத்துக்கு இளவரசனாகியபோது ஊர்கடோறும் பாடசாலைகளை மைத்து அங்கே சிறுவர்களையெல்லாங் கல்விபயில்வித்தவன். சோழ பாண்டி தொண்டைமண்டலங்களினின்றும் பண்டிதர்களை வர வழைத்து ஈழநாட்டிலுள்ளபுலவர்களோடு நல்லூரில் ஒரு தமிழ்ச்சங் கம் அமைத்தவன். யாழ்ப்பாணத்திலிருந்த சரசுவதிமகாலயத்திலில் லாத வடமொழி தென்மொழிநூல்களையெல்லாம் தமிழ்நாட்டினின்றும் வரவழைத்துவைத்தவன். அநேக நூல்களைப் புதியனவாக இயற்று வித்தவன். அவர்க்குப் பரிசிலும்வழங்கியவன். அந்த ராஜபரம்பரை யிலுள்ளவனும் வித்துவசிரோமணியும் அந்தச்சமஸ்தானத்துப்புலவனு மாகிய யசகேசரி (அரசகேசரி)யைக்கொண்டு, இரகுவமிசமென்னும் வடமொழிநூலை அஃதியற்றிய காளிதாசன்கீர்த்திப்பிரகாசமும்மழுங் குமாறு பொருளாழமும் சொல்வனப்பும் வர்ணனைகளும்மிக்குப் பொலிய விருத்தப்பாவாற்பாடுவித்தவன்.

அதனை நல்லூர்ச்சங்கத்திலரங்கேற்றிப் பின்னர்த் தமிழ்நாட்டிலும் பிரசித்தியெய்துவிக்கவேண்டித் திருவாரூர்ச்சங்கத்திலும் அரங்கேற்றி அச்சங்கத்தாரெல்லாம் சிரமிசைக்கொண்டு பாராட்டச்செய்தவன். தானும் ஜகராசசேகரமென்னும்பெயரால் ஒருசோதிடநூலை விருத்தப்பாவாற்செய்தவன். பரராசசேகரமென்னும் ஒருவைத்திய நூலைத் தனதுதமையன்பெயரினாலுமியற்றி அவன்பெயரையும் வியாபித்துநிலைக்கச்செய்தவன். அவன்காலத்திலே இராமேச்சரத்திலும் ஒரு பண்டிதசபையிருந்ததென்றும் அவன் அங்கே அடிக்கடிபோய் அச்சபையிலும்விளங்கினனென்றுந் தெரிகின்றது. அவன்காலமும் அரசகேசரிகாலமும் இற்றைக்கு 370 வருஷத்துக்குமுன்னுள்ளது.

**வையாபுரிஐயர்;** சித்தையர்சீடர். யாழ்ப்பாணம் சித்தன்கேணியைத் தமக்கு ஊராகவுடையவர். அவர் தென்மொழியில் இலக்கிய இலக்கணங்கள் நிரம்பக்கற்று வடமொழியில் யோகசாஸ்திரநிபுணராய்த் திருக்கோகர்ணஞ்சென்று யோகாப்பியாசஞ்செய்துமீண்டு பரராஜசேகரன்காலத்துவிளங்கியவர். அவர் திரிகாலமுமுணர்ந்த சாபாநுக்கிரகியென்பர். பர்ராஜசேகரன்கேள்விக்கு யாழ்ப்பாணத்துப் பூர்வோத்தரசரித்திரத்தை **வையைபாடலேன்னும்**பெயராற் பாடியவர். "வையாபுரிபாடல் பொய்யாது" என்பது இன்றும் வழங்கும் பழமொழி.

**கவிராஜவரோதயன்**—திரிகோணமலைக் கல்வெட்டுப்புராணம்பாடியவர். அவர் ஊர் காலந் தெரியவில்லை.

அவர்களுக்குப்பின்னர் எடுத்துக்கூறத்தக்கவர் **ஞானப்பிரகாசத் தம்பிரான்.** அவர் யாழ்ப்பாணத்துத்திருநெல்வேலியைப் பிறந்தவூராகவுடையவர். யாழ்ப்பாணத்தில் ஒல்லாந்தவரசுநடக்குங்காலத்திலே செல்வத்தாலும் குலத்தாலும் அதிகாரத்தாலுஞ்சிறந்த சைவவேளாண்குடியிலேபிறந்தவர். புசித்தற்கு ஆன்கன்றுகேட்ட ஒல்லாந்ததேசாதிபதிக்கு அதுமறுத்தகுற்றத்துக்கஞ்சிச் சோழநாட்டுக்கோடி அங்கே தமிழ்கற்று வல்லுநராகிப் பின்னர்க் கௌடதேசஞ்சென்று வடமொழியிலும்வல்லுநராகிச் சிதம்பரத்திலிருந்து சிவஞான சித்தியாருக்குத் தமிழி லோருரையும் ஹேமாத்திரிகற்பமுதலாக அநேக வடமொழி நூல்களுஞ்செய்தவர். சிதம்பரத்து ஞானப்பிரகாசம் அவர் வெட்டியகுளம்.

அவருக்குப்பின்னர்க்கூறத்தக்கவர் **கூழங்கைத்தம்பிரான்.** அவர் திருப்பனந்தாள்மடத்துத்தம்பிரான்மார்களுள்ளே தமிழ்க்கல்வியிலும் சிவபத்தியிலுஞ் சிறந்துவிளங்கியவர். அவர் அக்காலத்துமடாதிபதி தம்மீதுசுமத்தியவொருகுற்றத்துக்காகக் காய்ச்சியநெய்யிற்கையிட்டுச் சத்தியஞ்செய்து கை கூழையாகப்பெற்றவர். அதன்பின்னர் யாழ்ப் பாணஞ்சென்று அநேகருக்குத் தொல்காப்பியமும் சித்தியாரும் திருக் கோவையாரும் பாடஞ்சொன்னவர். அவர் போர்த்துக்கேய ஒல் லாந்த பாஷைகளிலும்வல்லவர். மெல்லோப் பாதிரியார்பாடியதாகச் சொல்லப்படும் **உவமானவிளக்கம்** கூழங்கைத்தம்பிரான்பாடியதாகச் சிலர் கூறுவர். நன்னூலுக்கு ஒருரை தம்பிரானுலெழுதப்பட்டது. அது பிற்காலத்தில் அருகிவிட்டது.

அவருக்குப்பின்னர் எடுத்துக்கூறத்தக்கவர் **சின்னத்தம்பிப்புலவர்.** வில்லவராயமுதலியார்புத்திரனர். அவர் ஏழுவயதளவில் வில்லவராய முதலியார்வீடெங்கேயென்று வினவிய ஒருவித்துவானுக்கு விடை யாகப்

"பொன்பூச்சொரியும்பொழிந்தசெழுந்தாதிறைக்கும்
நன்பூதலத்தோர்க்குநன்னிழலாம்—மின்பிரபை
வீசுபுகழ்நல்லூரான்வில்லவராயன்றன்
வாசலிடைக்கொன்றைமரம்"

என்னும் வெண்பாவால் விடையளித்தவரென்முற் பின்னுளில் அவர் படைத்தபுலமைக்கு அளவுகூறவேண்டா. அவரே மறைசையந்தாதி, கல்வளையந்தாதிகள் பாடியவர்.

**சோக்கலிங்கதேசிகர்**—அவர் யாழ்ப்பாணம் வரணியை ஜன்மஸ் தானமாகவுடையவர். அவர் தமிழ் வடமொழியிரண்டிலும் வல்லவர். தஞ்சையரசர்சபையிலே வேதாந்தம் வரதராஜமுதலியாரென அந் நாள்விளங்கியபண்டிதரை வாதத்திற்புறங்கண்டு சித்தாந்தசரபமெனப் பெயர்கொண்டவர். அவர் வேதாரண்யாதீனவித்துவானுயிருந்தவர். அவர் சின்னத்தம்பிப்புலவர்பாடிய மறைசையந்தாதிக்குப் பாயிரஞ் சொன்னவர்.

**மயில்வாகனப்புலவர், நெல்லைநாதப்புலவர்**—இருவரும் சகபாடிகள். முன்னையவர் யாழ்ப்பாணத்து மாதகலையூராகவுடையவர். பின்னையவர் இருபாலையூரர். ஒருகவியையாவது ஒருரையையாவது ஒருகாற்கேட்ட

மாத்திரத்தே பழம்பாடம்போலொப்பிக்கும் பேராற்றல்படைத்தவர். அவர்காலத்துவிளங்கிய வைத்தியலிங்கச்செட்டியார்மீது பிரபந்தம் பாடிக்கொண்டு சோழநாட்டினின்றும்வந் தரங்கேற்றிய செந்திக்கவி முன்னே அப்பாக்களை ஒப்பித்துப் பழங்கவியெனக்கூறி அவரைத் திகைக்கவைத்த விரகர். நெல்லைநாதர் தொடங்கிவைத்துப்போன நல்லைவெண்பாவைப் பாடிமுடித்தவர். அவர் புத்திரனுர் சேனுதிராய முதலியார். மயில்வாகனப்புலவர் புலியூரந்தாதியும் யாழ்ப்பாணவைபவ முஞ்செய்தவர். விரைவாகப்பாடுஞ்சக்தியும் வாக்குவன்மையும் பெரிது முடையர்.

வரதராஜபண்டிதர்—அவர் யாழ்ப்பாணத்துச் சுன்னுகத்தை ஊராக வுடைய அந்தண திலகர். சிவராத்திரிபுராணம், ஏகாதசிப்புராணமுத லியன பாடியவர். அவ்வேகாதசிப்புராணத்துச்செய்யுட்களில் ஒன்று இது :—

“ காயாம்பூங்காயாமுன்காய்விளவிற்கன்றெறிந்த
நேயாமாயாவேயானீள்புறவினிரைகுவிக்கும்
ஆயாவல்லகிபாயாவைவர்சகாயாபவள
வாயாபேயாவிமுலைமண்ணுண்டமாதவனே”

முத்துக்குமாரகவிராயர் — யாழ்ப்பாணத்துச் சுன்னுகப்பதியில் விளங்கிய வேளாண்மரபினர். கவிபாடுவதிற் பெருந்திறமைவாய்ந்தவர். அவர்பாடியபாடல்கள் எண்ணிறந்தன. இறவாதெஞ்சின மிகச்சிலவே. சிதம்பரத்து நடராஜப்பெருமான்மீதுபாடியகவிகளுள் ஒன்று இது:—

நன்மைசெய்தறிகிலேன்தன்மவழிசெறிகிலேன்நம்பினர்க்குதவிசெய்யேன்
நந்தாவனம்வையேன்மாதானமீந்துயேன்நற்கொடையிலாதகையேன்
புன்மைவழிதேடுவேன்கன்மவழிநாடுவேன்பொய்ச்சூதுவிளையாடுவேன்
புல்லரைப்பாடுவேன்புலைமகட்கூடுவேன்பொய்ச்சமயவழியோடுவேன்
சென்மமருடாய்தந்தைகுருதெய்வநிந்தனைகள்செய்துளேனெனினும்வாயாற்
சிவசிதம்பரமென்றுசொல்லுமடியேன்பவந்தீராதிருக்குமோதான்
சின்மயசொரூபனேயுன்மயமதாம்பாததெரிசனமெனக்கருளுவாய்
சிதம்பரமெனுந்தவர்நிதம்பரவிதம்பெறுசிதம்பரமகாதேவனே.

தென்மொழி வடமொழி யிரண்டினும்வல்லபுலவர்சிகாமணியாக இப்போதுவிளங்குஞ் சுன்னுகம் குமாரசுவாமிப்புலவர் அக்கவிராயர் மரபினரே.

திரிகோணமலை முத்துக்குமாரப்புலவர்—திருக்கோணுசலபுராணம் பாடியவர். அப்புராணம் 1591 செய்யுளுடையது. அவர் 75 வருஷத்துக்குமுன்னே திரிகோணமலையில் இருந்தவர்.

ராஜசோதிடரென அரசினராற் பட்டம்பெற்ற விசுவநாதசாஸ்திரி யார், சுவாமிநாதப்புலவர், சேனாதிராயமுதலியார், சம்பந்தப்புலவர், சரவணமுத்துப்புலவர் முதலாக அநேகர் சிறிதுகாலத்துக்குமுன்னர் விளங்கினார்கள். அவர்கள்வரலாற்றைவிரிப்பிற் பெருகும்.

தமிழரசுபோய்ப் பறங்கியரசும் ஒல்லாந்தவரசும்நடந்தகாலத்தில் ஈழநாட்டைமூடியிருந்த மாயாவிருளைச்சீத்து ஞானப்பிரகாசம்காலு மாறு முற்கூறிய ஞானப்பிரகாசர்மரபிலே நல்லூரிலே ஆறுமுகநாவலர் உற்பவித்தனர். அவருடைய அளப்பிலாஅறிவாற்றல் உலகப்பிரசித்தி யாதலின் இச்சபையில் யானெடுத்துரைப்பது மிகையாம். ஆதலின் அவர் வரலாற்றை இவ்வளவில் முடிக்கின்றேன்.

ஆறுமுகநாவலர்காலத்திலே அவருக்கு நட்பினராயும் உசாத் துணையாயும் விளங்கினவர் நீர்வேலிச் சங்கரபண்டிதர். அவர் சம்ஸ் கிருதத்திற் பெரும்பாண்டித்தியம்படைத்தவர். தமிழிலும் புலமை வாய்ந்தவர். குடந்தைவெண்பாப்பாடிய முருகேசபண்டிதர் இவர் மாணாக்கர்.

சென்னையிலிருந்து ஆங்கில திராவிட பண்டிதராய்ப் பிரசித்தி யுற்றுவிளங்கிய சி. வை. தாமோதரம்பிள்ளை, விசுவநாதபிள்ளை, சிதம் பரப்பிள்ளை, வித்துவசிரோமணியும் நாவலர் மருகருமாகிய பொன்னம் பலபிள்ளை, சிவசம்புப்புலவர் என்போர்பெயர் இச்சபையார் நெஞ்சி டைப் புதுமைபயந்துநிற்பன. அஷ்டாவதானத்திற் பெயர்படைத்த புலவர்கள் வல்லுவெட்டித்துறை ஏகாம்பரப்புலவர், புலோலிக் கதிர் வேற்பிள்ளை என்பவர்கள்.

சம்ஸ்கிருதபாஷையிற் பிரசங்கஞ்செய்தலிலும் சம்பாஷிப்பதிலும் பெயர்படைத்தவர் வில்கணீயம், இரகுவமிசம் முதலியநூல்களைத் தமிழிற் கத்தியரூபமாகமொழிபெயர்த்த புலோலிவித்துவான் கணபதிப் பிள்ளை. அவர், இப்போது இந்துக்கல்லூரித் தமிழ்த்தலைமை ஆசிரிய ராக்விளங்கும் புலோலி வ. குமாரசுவாமிப்புலவர்தமையனார்.

தமிழ்விரிவகராதிசெய்தவரும், தென்மொழி வடமொழி ஆங்கில மொழி மூன்றிலும் நிபுணரும், நீதிபதியுமாய்விளங்கிய கதிர்வேற்பிள்ளை யுடையகீர்த்தி இச்சபையில் அறியாதாரியார்.

இன்னுங்கூறின் அளவின்றிப்பெருகுமென்று இத்துணையில் முடிக்கின்றேன்.

"நிலம்பரவும்செய்யதமிழ்நாடுவாழி நிகழ்ந்துவரும்செய்யதமிழ்மொழியும்வாழி
புலம்பரவும்தமிழ்ப்பயிலும்புலவோர்வாழி புகழ்மதுரைசேர்ந்ததமிழ்ச்சங்கம்வாழி
நலம்பரவுமச்சங்கத்தலைமைவாய்ந்து நடத்துமுத்துராமலிங்கமன்னன்வாழி
தலம்பரவவிப்பொழுதுசங்கமேவித் தனிநடத்துஞ்சயராமநாதன்வாழி."

ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை.

# புரஞ்சனோபாக்கியானம்.

"செந்தமிழ்" (தொகுதி-கஉ பகுதி-எ-ல்) உருகூ-ம் பக்கத் தொடர்ச்சி.

---

இவ்வாறு மன்னவன்மொழிந்தவற்றைக்கேட்டு, அம்மங்கை புன்னகைகொண்டாள். அதனைக்கண்ட அரசன், அவளுக்குத் தன்பால் அன்பானநோக்கம்உள்ளதெனஊகித்து, "ஏ! பெண்ணரசே! என்முகத்துக்கு எதிர்முகமாக உன்பொன்முகத்தைக்காட்டுவாயாக. பராமுகஞ் செய்யலாகாது. உனது அழகியமுகமானது, நீண்டு நறுமணம்பூண்டு கறுத்து நெய்த்துச் சுருண்டு இருண்டு அடர்ந்துதொங்குகின்ற உனது கூந்தற்கற்றையினுற் சிறிது மறைக்கப்பட்டுள்ளது. அவ்வளகபாரத்தின்மறைவைவிலக்கி, உன் எழின்முகத்தையேறெடுத்துக்காட்டவேண்டும். மதுரமாகப்பேசவும்வேண்டும்" என்று இவ்வாறு இரந்துவேண்டினன். வேண்டலும், புரஞ்சனியென்னும் அப்பெண்ணணங்கு புன்னகையோடு அவனைநோக்கிக்கூறுவாளாயினுள்:

"ஏ! ஆடவர்தலைவரே! என்னைப்படைத்தவனையும், என்குலத்தையும், கோத்திரத்தையும், ஊரையும் பேரையும் யான் தெளிவுற அறிந்திலேன். இந்நகரத்தில் யான்இருப்பதையறிவேனன்றி அதன்மேல் ஒன்றுமறியேன். இந்தநகரம், எனக்கு உறைவிடமாக எவனால்நிருமிக்கப்பட்டதோ அவனையும்அறிகிலேன். இவ்விடத்தேதோன்றுகிற ஆடவரும் மகளிரும் எனக்கு உயிர்த்தோழரும் உயிர்த்தோழியருமாவர். யான் உறங்கும்போதும், இந்நாகமானது உறங்காமல்நின்று இந்நகரத்தைப் பாதுகாத்துக்கொண்டிருக்கின்றது. ஏ! வீரரே! நீர் தற்செயலாய் இவ்விடம்வந்தீர் உமதுவரவு நல்வரவாகுக. உமக்கு மங்களமுண்டாகுக. சப்தாதிவிஷயபோகங்களை நீர் அனுபவிக்கவிரும்பிநின்றீர். பகைவரைஎரிக்கவல்ல ஆண்மையுடையீர்! உம்உற்றுரோடு உம்மைநேசஞ்செய்வித்து மணம்புரிந்துகொள்வேன். ஓ! பிரபுவே! ஒன்பதுவாயில்களோடுகூடிவிளங்கும் இந்நகரத்தை நீர் கைக்கொண்டு ஆளக்கடவீர். நான் உமக்குத் தேடியிடக்கூடும் சகலபோகங்களையும் அனுபவித்துக்கொண்டு நூறுபிராயம்வாழக்கடவீர். உம்மைவிட்டு வேறெவரை நான்விரும்பப்போகின்றேன். பரலோகசிந்தையற்றவனும்,

இகலோகத்திற்செய்யஅடுப்பது இன்னதென்று அறியாதவனும், பசு துல்யனுமானவனையோ நான் பதியாகவரிப்பேன்? ஸ்வர்க்காதிலோக சுகங்களுக்குச்சாதனமாகிய யஜ்ஞாதிதர்மங்களும், அவற்றிற்கு உறுப்பானபொருள்களும், அவற்றாற்பெறலாகும் இன்பங்களும், மக்கட்பேறும், அம்மக்களால்வரும் ஆனந்தமும் ஆகிய இவையெல்லாம் இந்தக்கிரகஸ்தாசிரமத்தில் எய்தலாமன்றோ? இவ்வில்லறமானது பிதிரர்க்கும், தேவர்க்கும், மக்கட்கும், துறவினர்க்கும், ஏனையபிராணிகட்கும் உண்டிமுதலியவற்றை உதவுதலால், இதனை அன்னார்க்குச்சரணமென்று அறிவுடையார்கூறினர். ஓ! புருஷசிரேஷ்டரே! என்போலப் பருவமுள்ளவளும், கணவன் விரும்புவனவற்றைத்தேடிக்கொணர்ந்து, அவனுக்கு அன்போடு இடவல்லவளுமாகியஎவள்தான் உம்மைப் போலக் கண்ணுக்குஅழகுள்ளவனும், கல்விமுதலியவற்றாற்சிறந்தவனும், கருத்துக்குஇயைந்தவனுமாகிய காதலனைவரியாள்? ஓ! திண்மைபெற்றுத் திரண்டுருண்ட அழகுகுடிகொண்டதோளுடையீர்! இக்குணங்களை ஒருங்குடைய உம்மை நான் ஏனோவரியேன்?" என்று இனியகுரலுடன் இயம்பினாள்.

இவ்வாறு, அவ்விருவரும் உடன்பாடுகொண்டு தம்பதிகளாய், அப்பதியைத் தம்பதியாகக்கொண்டு அதனுட்புகுந்து மிக்ககளிப்போடு வாழ்ந்துவந்தனர். வாழ்ந்துவருகையில், புரஞ்சனன் வேனிற்காலத்தில் வெப்பந்தணிந்து இன்புறும்வண்ணம், பூம்பொழிலைநாடிச்சென்றனன். அவனுடன் சென்றமகளிர் அப்பொழிலிடத்திலும் அங்குள்ள பூந்தடத்திலும் பலவகையாக விளையாடிக்களியாடிப் புரஞ்சனவேந்தனை இன்புறுத்துவாராயினர். சிலர் நீர்விளையாடினர்; வேறுசிலர் நிழல்தவழும் பொழிலில் எழில்மிகுந்த நறுமலர்கொய்துசூடினர்; மற்றுஞ்சிலர் யாழிற்குரலமைத்துப்பாடினர்; இன்னுஞ்சிலர் அன்னங்களோடு நடைகூடினர்; பின்னுஞ்சிலர் ஊசலாடினர். இவ்வாறு அவர்கள் வேறுவேறு ஆடல்களைப்புரியாநின்றனர். மன்னவன் தானும் அப்பொற்றாமரைப் பூந்தடமாடித் தன்காதலியாகிய புரஞ்சனியோடு அவ்வினிய காட்சிகளைக்கண்டு களிப்பெய்தி இன்புறுவானாயினன்.

அரசனே! நான் முன்சொன்னநகரத்திற்குமேல் ஏழுவாயில்களும் கீழ் இரண்டுவாயில்களும்உள்ளன. இவ்வொன்பது வாயில்களும், அரசன் வெவ்வேறு தேயங்களிற்சென்று விஜயஞ்செய்துவருவதற்கு

ஏற்பட்டனவாம். மேற்கூறியநகரத்திற்குப் புரஞ்சனனேயன்றி மற்றெவனும் பிரபுஅல்லன். மேலேயுள்ள ஏழுவாயில்களில் ஐந்து முன்பாகக்காணப்படுகின்றன. ஏனைய இரண்டில் ஒன்றுவடபுறமும் மற்றொன்று தென்புறமும்மாகஉள்ளன. ஓ! அரசே! கீழ்ப்புறத்தில் ஒரேஸ்தானத்தில் இரண்டுதுவாரங்கள் நிருமிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று கத்யோதை எனவும் மற்றொன்று ஆவிர்முகீ எனவும் பெயர் பெறும். புரஞ்சனன், த்யுமானனென்னும் பெயருள்ளதோழனோடு, விப்ராஜிதம் என்ப்பெயர்பெற்ற ஜனபதத்திற்குச்செல்வான். மற்றும், நளினீ, நாளினீ என்னும் இரண்டுவாயில்களுள்ளன. அவற்றால், புரஞ்சனன், ஆடையில்லாமையால் அவதூதன் எனப்பெயர்பெற்ற நண்பனோடு, நறுமணமுண்டமையின் ஸௌரபமெனப்படும் தேயத்தைக் குறித்துச்செல்கின்றான். மேற்கூறியநகரத்தின் முகபாகத்தில் ஒரு துவாரமுண்டு. அதற்கு முக்யை என்பதுபெயர். புரஞ்சனவேந்தன் சுவையின் திறனறியவன்மையுடைமையின் ரஸஜ்ஞன் என்றுபெயர் பெற்றமித்திரனோடு, அந்த முக்யை என்னும் வாயிலினால், விற்பதில் வன்மையுள்ளமையின் விபணன் எனப்பெயரிய ஸகாவோடு, பண்டங்கள் நிறைந்துள்ளமையின் ஆபணம் எனப்பெயர்பெறும் தேயத்தையும், பல உணவுகளும் உள்ளமையின் பஹூதநம் என்னும் தேயத்தையும் அடைகின்றான். அன்றியும், அவன் தென்புறத்துள்ள பித்ருஹூ என்னும் பெயரிய வாயில்வழியாகச் சுருத்தரன் என்னுந்தோழனோடு தென்றிசைக்கண் உள்ள பாஞ்சாலநாட்டுக்குச் செல்கின்றான். மற்றும், அந்தச் சுருத்தரன் என்பவனோடே, வடபுறத்துள்ள தேவஹூ என்னும்வாயில்வழியாக உத்தரபாஞ்சால நாட்டுக்குச் செல்கின்றான். அந்நகர்க்குக்கீழ்ப்புறமுள்ள (அடியிலுள்ள) ஆசூரீ என்னும்வாயில்வழியாக துர்மதன் என்னும் சேவகனோடு கிராமகம் என்னும் விஷயத்தை நோக்கிச்செல்கின்றான். அக்கீழ்ப்புறமேயுள்ள நிருதி என்னும் மற்றொரு வாயில் வழியாக், லுப்தகன் என்னும் சேவகனோடு வைசஸம் என்னும் ஸ்தலத்துக்குச் செல்கின்றான்.

நகரத்தில் வதிபவர்களும் புரஞ்சனனுக்கு ஸஹகாரிகளுமான மேற்கூறிய ஒன்பது பேர்களில் இருவர்மட்டும் குருடர்; வாக்கில்லா ஊமையர்; இடம்விட்டுச் செல்லாமையால் பேசஸ்கிருத் என்கிற செந்துவைப் போலிருக்கின்றவர்கள். (பேஸஸ்கிருத்—காலேகையாயுள்ள உயிர்.)

இந்திரியங்களை உடையார்க்கு இறைவனான புரஞ்சனன் முற்கூறிய இருவரில் ஒருவனைத்துணைகொண்டு நடக்கின்றான்; மற்றொருவனைத் துணைகொண்டு தொழில்களைச்செய்கின்றான். அவ்வரசன் அந்தப் புரத்தில் விஷூசீனன் என்பவனைத் துணைகொண்டு மனைவிமக்கள் முதலியோரால் விளையும் இன்பத்தையும், அதற்கடியான மோகத்தையும், அதனினீங்கித் தெளிவையும், அதனால் உளதாம் மோக்ஷத்தையும் அடைகின்றான்.

புரஞ்சனன் இன்பத்தில் ஆழ்ந்தநெஞ்சுடையனாய், மனைவிமக்களால் வஞ்சிக்கப்பட்டவனாய், நல்லறிவிழந்து, தன்காதலி எதையெதைக் காதலிக்கின்றாளோ அதையதை, அவளுக்குவசனாகித் தேடிக்கொடுத்து அவளை உவப்பித்து வருவதுமன்றி, அவள் சில வேளைகளில் உயர்ந்த மதுவைப் பானஞ்செய்வாளாயின், தானும் அதனைப் பானஞ்செய்வான். அவள் உண்பாளாயின், தானும் உண்பான். அவள் பாடுவாளாயின், தானும் பாடுவான். அழுவாளாயின், தானும் அழுவான். நகைப்பாளாயின், தானும் நகைப்பான். பேசுவாளாயின், தானும் பேசுவான். ஓடுவாளாயின், தானும் ஓடுவான். நிற்பாளாயின், தானும் நிற்பான். படுப்பாளாயின், தானும் உடன் படுப்பான். இருப்பாளாயின், தானும் உடனிருப்பான். கேட்பாளாயின், தானும் அவள் கேட்குமவற்றையே கேட்பான். ஒன்றைப் பார்ப்பாளாயின், அதனையே தானும் பார்ப்பான். ஒன்றை மோப்பாளாயின், அதனையே தானும் மோப்பான். அவள் ஏதேனும் ஒன்றைத் தொடுவாளாயின், தானும் அதனையே தொடுவான். அவள் துயர்ப்படுவாளாயின், தானும் துயர்ப்படுவான். களிப்புறுவாளாயின், தானுங் களிப்புறுவான். இங்ஙனம் எல்லாப் படியாலும் புரஞ்சனன் தன் மனைவியால் வஞ்சிக்கப்பட்டான். சுதந்திரனாய் எதனையும் செய்ய வல்லனல்லனாய், தைரியமின்மையின், அந்தோ! கிரீடாமிருகம்போலே, தன் காதலியின் செயல்களையே அவன் அநுகரித்துவருவானாயினன்.

**கா. ஸ்ரீ. கோபாலாசாரியர்.**

(இன்னும் வரும்.)

# திருமலை நாயக்கர் 1623—1659 கி' பி.

## (மதுரைச்சரித்திரத்தின் ஒருபகுதி.)

"செந்தமிழ்" (தொகுதி கஉ பகுதி கூ-ல்) ௩௬௪-ம்பக்கத் தொடர்ச்சி.

### நாயக்கரின்மதஸ்வாதந்திரியம்.

நாயக்கர்கள் எல்லாரும் வைஷ்ணவர்களென்பது யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டவிஷயமே.* ஆகையால் நாயக்கரும் வைஷ்ணவர்தான். வைஷ்ணவரென்பார் விஷ்ணுவே முழுமுதற்கடவுளென்று கொண்டாடுபவர். நாயக்கர் இக்கொள்கையைப் பின்பற்றியவராயினும் சைவமதத்தைத்தூஷிப்பவரல்லர். இந்தவிஷயம் இவர் சிவன் கோயிலுக்காகக்கட்டிய கட்டிடங்களால் நன்குவிளங்கும்.

இவ்வரசன் வைஷ்ணவமதத்தைச்சார்ந்த ஹிந்துவாயிருந்தபோதிலும் தன்னைச்சாராதபுறமதத்தவர்களைவெறுக்கவேயில்லை. ஆனால் அவர்களுக்குவேண்டியநன்மைகளைச்செய்துவந்தார். இவர்காலத்தில்தான் ரோமன்காதலிக்பாதிரிமார் பலஹிந்துக்களைக் கிறிஸ்தவர்களாக்கினார்கள்; மதுரையில் மறியாள்கோயிலும்கட்டினார்கள். ஆனால் இவருக்குமுன்னிருந்தநாயக்கமன்னர் இந்தவிஷயத்திற்குச் சிறிதும் இடம்கொடுக்கவில்லை.

முற்கூறியகாரணத்தாற் சிலர் இவர் கிறிஸ்தவமார்க்கத்திற் சார்ந்தாரோ என்று சந்தேகித்திருக்கிறார்கள். அவ்வாறு சந்தேகப்படுவதற்குக் காரணமேயில்லை. பின்னர்க் கிறிஸ்தவர்கள் தங்கள் மார்க்கத்தைப் பரவச்செய்வதற்கு இவ ரிடங்கொடுத்திருப்பாரோஎன்றால் ஹிந்துக்கள் சிலமதத்தார்களைப்போலத் தங்கள்மதத்திற்சேராதவர்களுக்குமோக்ஷமில்லையென்றுசொல்லுவதில்லையாதலாலும், எம்மதமும் அம்மதத்தின் கிளையாகுமென்று நினைப்பார்களாதலாலும் நாயக்கர் ஹிந்துவாதலாலும் கிறிஸ்தவர்களைவெறுக்கவில்லை. இவர் கிறிஸ்தவராயிருந்தால் அம்மார்க்கத்தின் நடவடிக்கைகளைப்பற்றி ரோமாபுரிக்கு அடிக்கடி கடிதம் எழுதிவந்தபாதிரிமார்கள் இந்தவிஷயத்தைக்குறித்து எழுதாமலேயிருக்கமாட்டார்கள். அப்படிக் கடிதமெழுதியதாய்த்தெரியாததால் நாயக்கர் ஹிந்துவே. இந்தவிஷயத்தை, ஹிந்துக்களின்கோயிற்றிருவிழாக்களுக்குப் பலமண்டபங்களும்கட்டி, நிலமானியங்களும்விட்ட

---

*இன்னோரன்ன அபிப்பிராயங்களிற் பத்திராதிபர்க்கு உடம்பாடன்றெனவுணர்க. ப-ர்.

அவர்தன்மை நன்குதெரிவிக்கிறது. கட்டிடங்கள் கட்டுகையில் ஹிந்துவாயிருந்து பிறகு கிறிஸ்தவமார்க்கத்திற்சேர்ந்திருக்கக்கூடாதாவென்ருல், அவ்வாறு இருப்பின் அந்தவிஷயத்தைப் பூர்வீகசரித்திரங்கள் வெளியிட்டிருக்கும். அப்படிப்பட்டசரித்திரம் இல்லாததால் அவர் ஹிந்துவே. இதற்குமுன் அவர்சரித்திரத்தை யெழுதிய கிறிஸ்தவர்களும் அவரை ஹிந்துவென்றே ஸ்தாபித்திருக்கிருர்கள்.

நாயக்கர்காலத்தில் மதசம்பந்தமாய் ஒருகலகம்நடந்திருக்கிறது. அது சைவர்களுக்கும், வைஷ்ணவர்களுக்கும் நிகழ்ந்தது. புதுமண்டபத்தில் ஏகபாதமூர்த்தியின்விக்ரகமுள்ளதூணைச் சைவர் வைக்க விரும்பினர். அவ்வாறு வைக்கக்கூடாதென்று வைஷ்ணவர்கள் தடுத்தார்கள். இறுதியில் இருகக்ஷியாரும் தங்கள்வழக்கைநாயக்கரிடம்செப்ப அவர் அதைவிசாரித்து நியாயம்கொடுத்தார். ஆதலால் நாயக்கர் காலத்திலும் முற்கூறிய இருவகுப்பார்க்கும் மதச்சண்டை நடந்ததாகத்தெரிகிறது.

## நாயக்கரும்கல்வியும்.

இவ்வரசர் நாயக்கராதலால் இவருடைய தாய்ப்பாஷை தேனினுமினியதெலுங்கே. ஆயினும் நாயக்கர் தமிழ்நாட்டிற்பிறந்து அங்கேயேவளர்ந்ததால் தமிழைக்கற்கும்பாக்கியமும் அவருக்குக் கிடைத்தது. அது சரித்திரத்தாலும்வெளியாகிறது. நாயக்கரிடம் குமரகுருபரஸ்வாமிகள் சமஸ்தானவித்துவானுயிருந்தாரென்று வரலாறு தெரிவிக்கிறது. எனவே தமிழையும் தமிழ்ப்புலவர்களையும் இவ்வரசர் நன்கு ஆதரித்தார் என்பதுவிளங்கும்.

இனி இவர்காலத்தில் நாட்டிற் கல்வி எவ்வாறு நடைபெற்றதென்பதைப்பார்ப்போம். அக்காலத்திற் பிராமணர்கள்மட்டும் வேறெந்த வகுப்பாரைப்பார்க்கிலும் கல்வியிற்சிறந்தனர். எல்லாவகுப்பார்க்கும் கல்வி சமமாகக்கொடுக்கப்படும் இக்காலத்திலேயே முற்கூறிய வகுப்பார் கல்வியில் மேம்பாடடைந்திருப்பதால் அக்காலத்தும் அவ்வாறு இருந்திருப்பாரென்றுசொன்னுல் அது தவருகாது. கி. பி. 1610-ல் நோபிலிபாதிரியார் தம்நாட்டுக்கு எழுதியகடிதத்தில் அந்த வருஷத்தில் மதுரைச் சர்வகலாசாலையில் 10-ஆயிரம்பிராமணர்கள் கல்விகற்றுவந்ததாயும் அக்கல்வியாலுண்டாகுஞ்செலவிற் பெரும்

பாகத்தைச் சக்கரவர்த்தியும் சிறுபாகத்தை மதுரைநாயக்கர்களும் கொடுத்துவந்ததாகவும் தெரிவித்திருக்கிறார். இந்தக்கல்விச்சாலையைத் தவிர மற்ற எதுவும் ராஜாங்கத்தாரால் ஆதரிக்கப்படவில்லை. ஆனால், சில கிராமங்களிற் சிறுபள்ளிக்கூடங்களுண்டு. அவைகள் ஆங்காங்குள்ள கிராமவாசிகளினுதவியால் நடைபெற்றன. அம்மாதிரிப்பள்ளிக்கூடங்கள் இப்போதும் சிலகிராமங்களிலிருப்பதால் அவற்றைப் பற்றிய முழுவிஷயத்தையும் இங்குச்சொல்லவேண்டியது அநாவசியம்.

## ராஜரீகம்.

உத்யோகஸ்தர்கள்:—பூர்வந்தொட்டே இந்திய அரசர்களுக்குதவியாகச் சில உத்யோகஸ்தர்களிருந்திருக்கிறார்கள். அவர்களில் ஒவ்வொருவரும் ஒவ்வோரிலாகாவிற்குத்தலைவராயிருப்பார்கள். அவர்களில் முதலவன்மந்திரி. இக்காலத்துச் சிலதேசங்களின் மந்திரிகளுக்கு எவ்வளவுசெல்வாக்குண்டோ அதனினும் அக்காலத்தில் இந்திய மந்திரிகளுக்கு அதிகமாயிருந்திருப்பதாகத்தெரிகிறது. ஒருதேசத்தோடு சண்டையேனும் சமாதானமேனும் அரசன் நடத்தவிரும்பினால் அதற்கு மந்திரியின்சம்மதம் அவசியம்வேண்டும். ஏதேனும் ஒரு புதியசட்டம் ஏற்படுத்தவேண்டுமாயினும் பழையசட்டங்களைப் புதிப்பிக்கவேண்டுமாயினும் மந்திரியின்சம்மதம் அவசியம்வேண்டும். சுருக்கிக்கூறுமிடத்து அரசன்செய்யும் அற்பவிஷயமும் மந்திரியால் ஒப்புக்கொள்ளப்படவேண்டும். அம்மந்திரி வரும்பொருளுரைக்கக்கூடிய புத்திதீக்ஷண்யமுடையவனுயிருப்பான். மந்திரிக்கடுத்த உத்யோகஸ்தன் தந்திரி: அதாவது சேனைத்தலைவன். அவன் தேசச்சேனைகளைச்சரியாய்ப் பழக்குவான். ராஜத்துரோகிகளையும் ராஜவிரோதிகளையும் கண்டுபிடித்துத் தண்டனைக்குட்படுத்துவான். அவனுக்கு அடுத்த உத்யோகஸ்தன் பிரதானி: அவன் ராஜ்யத்தின் பணசம்பந்தமானவற்றை மேற்பார்ப்பான். ராயசன் அரசனது அந்தரங்க உத்தரவுகளையும் அரசனது காரியக்குறிப்புகளையுமெழுதிவைப்பான். சுருக்கிச்சொன்னுலிவனே அரசனது அந்தரங்கக்காரியதரிசி. கணக்கன் தேசத்தின் காசறையி (கஜானுவி)ன் வரவுசெலவுகளைச் சரிபார்ப்பான். இவன் கணிதத்திற் சிறந்தவனுயிருப்பான். இந்த உத்யோகம் இப்போதிருக்கும் ஜில்லாவின் 'கஜானுடிப்டிகலெக்டர்' உத்யோகத்தை ஒத்தது. ஸ்தானிகன் அல்லது தூதன் மாறுவேஷத்தோடு புறநாடுகளுக்குப்போய் ஆங்காங்குள்ள

வர்த்தமானங்களை அப்போதைக்கப்போது தன் அரசனுக்குத்தெரிவிப்பான். சிலவேளைகளில் தன்னரசன் உத்தரவின்மேல் வேறொரு அரசனிடம் காரியங்களைமுடிப்பதற்குத் தூதுபோவான். ஆதலால் இவன் சமயத்துக்கேற்ற ஆலோசனையோடு வெகுசாதுரியமாய்ப்பேசக் கூடியவனாயிருப்பான்.

நாய்க்கர்கள்காலத்திலிம்முறை சிறிதுமாறுபட்டிருந்தது. மந்திரியே தந்திரியாயுமிருந்தான். அவன்தான் தளவாய். நாயக்கர்கள்காலத்திற் பிராமணர்களே இந்தவேலையைப் பெரும்பாலும்பார்த்துவந்தார்கள்.

இதனால், தளவாய் மதுரைக்குவெளியே போர்புரியப்போகையில் தலைநகரைக்காப்பதற்காக ஒரு சேனைத்தலைவன்வேண்டியதிருந்தது. அந்தவேலைபார்த்தவன்தான் தளகர்த்தன். முதலில் இந்த உத்யோகஸ்தன் மதுரையைப்பாதுகாக்க ஏற்படுத்தப்பட்டவனானாலும் வரவரத் தேசத்தின்போலீசிலாகாவை இவனே மேற்பார்த்தான். இவனைப் போன்றதளகர்த்தர்கள் திருச்சி திருநெல்வேலிமுதலியபெரிய நகரங்கள் ஒவ்வொன்றிலும் நியமிக்கப்பட்டார்கள்.

அக்காலத்தில் நாட்டிற் பெருஞ்சேனைகளிருக்கவில்லை. பல கிராமங்கள் ஒருதலைவனுக்குக் கொடுக்கப்படும். அவற்றின் வருமானத்தை அத்தலைவன் அனுபவிப்பான். அவன் பல ஆட்களைத்தனக்கு உட்படுத்திவைத்திருப்பான். அரசன் யாரோடேனும் போர்புரியவிரும்பினால் நாட்டிலுள்ள எல்லாத்தலைவர்களும் த த் த ம் சே னை க ளோ டு குறித்த இடத்தில் அரசனதுசேனையைச்சந்திப்பார்கள். இந்தத்தலைவர்கள்தாம் பாளையக்காரராயிருந்திருக்கவேண்டுமென்றுதெரிகிறது.

முற்கூறியவரலாற்றால் நமது ராஜாங்கத்தார் இப்போது ஏராளமானபொருட்செலவுசெய்து நாட்டுக்காவலின்பொருட்டுவைத்துள்ள சேனையைப்போல் அக்காலத்திற் சேனைகளிருந்திருப்பதாகத் தெரியவில்லை. மேலும் பாளையக்காரர்க்கு மானியங்கள்விட்டிருந்ததுபோலவே வேறு ஒவ்வொருவேலைக்கும் மானியங்கள்கொடுக்கப்பட்டிருந்தன. அந்தமானியங்கள் அனுபவிப்பார் தமது வேலைகளைச் சரிவரச்செய்து வந்தார்கள். அப்படிவிடப்பட்ட மானியங்களெல்லாம் இப்போதும் நமது ராஜாங்கத்தாரால் ஆதரிக்கப்பட்டிருக்கின்றன.

## நியாயம்.

கிராமாதிகாரிகள் சிறுவழக்குகளைத் தாமே தீர்த்துவந்தார்கள் ஆனால் சிலகிராமங்களிற் கிராமாதிகாரிசேர்ந்த பஞ்சாயத்தா வியவகாரங்களைமுடித்துவந்தனர். அவர்கட்கடங்காத கிரிமின வழக்குகளைப் பாளையக்காரரும், அவர்கட்குமேற்பட்டிருந்த ஸிவி கிரிமினல்வழக்குகளை யந்தந்தநாட்டுக்கவர்னர்களும் தீர்த்துவந்தார்கள் இவர்களில் எவர்க்கும் வழக்குத்தீர்ப்பதற்குப் பணம் கொடுக்கவேண் வதில்லை. எனவே இவ்வாறு பிறக்கும்நியாயங்களெல்லாம் ஒழுங்க யிருந்தனவென்றுகூறமுடியாது. சிலர் லஞ்சம் பெற்றுக்கொண்டு அ யாயத்தீர்ப்பும் சொல்லியிருப்பார்கள்.

பெரிய ஸிவில் கிரிமினல்வியவகாரங்களையும், பாளையங்களின் வழக்குகளையும், மதக்கலகங்களையும் நாயக்கரே நேரிற் றீர்த்துவந்தார் இக்காலத்தில் நீதிஸ்தலங்களில் நியாயாதிபதிக்குதவிசெய்கிற 'அஸெஸர் களையும், 'ஜூரி'களையும்போல் அக்காலத்தில் அந்த வேலையைச் சில பிராமணர்கள்செய்துவந்தார்கள். அந்த உத்யோகம் எல்லார்க்குப் கொடுக்கப்படமாட்டாது. ஆனால் பலநூல் வல்லுநரும் நீடிய அனுப முள்ளவர்களுமே இந்த உத்யோகம் பார்க்கத்தக்கவர்களாம். அக் காலத்து தேசாசாரப்படியும், சாஸ்திரப்படியும், ஜாதிமுறைப்படியும், நியாயம் அரசனாற் கொடுக்கப்படும்.

## நிலவரி.

இந்த வரிவசூல் இப்போது இருப்பதையே அநேகமாய் ஒத் திருந்ததென்னலாம். கிராமமணியகாரன் வரிவசூல்செய்து அந்தந்த மாகாணத்தலைவனிடம் பணத்தை ஒப்புவிப்பான். அவன் அதை மதுரைக்காசறைக்குக் கொண்டுசேர்ப்பான். மதுரையைப்போன்ற பெரியநகரங்களிலும், அவற்றைச்சுற்றியுமுள்ளபாகத்திலும் வரி வசூல் செய்பவனுக்குச் சீமைமணியகாரன் என்றுபெயர். நிலவிளைச்சலைச் சிலபாகங்களாகப்பிரித்து ஒருபாகத்தை அரசன்கொள்வான். சில சமயங்களில் விளைச்சலிற் பாதிப்பாகமும், வேறுசமயங்களில் $\frac{1}{3}$ பாகமு மாக மாறுபட்டிருக்கும். ஆனால் $\frac{1}{6}$ பங்குதான் அரசன்கொள்ள வேண்டுமென்று விதிகூறுகிறது. விளைச்சலில்லாதகாலங்களில் நிலவரிகிடையாது. இப்போது நாம் நிலங்கட்குக்கொடுக்கும்வரி முன் நாம்கொடுத்த $\frac{1}{6}$ பங்கிற்கும் மிகக்குறைந்ததென்னலாம்.

**வேறுவருமானம் :—** நிலவரியைத்தவிர வேறுவருமானங்களும் அரசனுக்குண்டு. ஏர்வினை, படகுவரி, தொழில்வரி, தேர்வரியாதியனமூலமாயும், சங்கு மீன் முத்துச்சிப்பிமுதலியவற்றாலும், அரசனுக்கு வரும்படிகிடைக்கும். அரசன் தன்சொந்தத்திற்குவைத்துக் கொள்ளும் நிலங்களிலிருந்தும் வருமானமுண்டு. இவ்வாறுள்ள நிலங்கள் முதல்தரத்தனவாயிருக்கும்.

## நாயக்கரின் முடிவு.

நாயக்கரின் மரணத்தின்சந்தர்ப்பத்தைப்பற்றி முன்னரே ஒரு இடத்திற்கூறினோம். அவருடைய அந்தியகதியைப்பற்றிப் பலகதைகள்வழங்குகின்றன. அவற்றில் ஒன்றேனும் நம்பத்தக்கதாயில்லை. அவ்விதமாகிய எல்லாக்கதைகளிலும் கோயிலைச்சேர்ந்தவர்களால் அவர் கொலையுண்டதாகச்சொல்லிக்கொள்ளப்படுகிறது. அவ்வாறு நினைப்பதற்குத் தகுந்த ஏதுக்களில்லை. அக்காலத்திருந்த காதலிக்பாதிரிகளும் இதைப்பற்றி எதுவும் எழுதிவைக்கவில்லை. அதனால் இவர் இயற்கையாயும், திடீரெனவும் இறந்ததாக நினைக்கக்கூடியதாயிருக்கிறது.

## முடிவுரை.

நாயக்கர் தமதுசக்கரவர்த்திக்குவிரோதம்செய்ததற்காக அவர்மேல் நாம் எவ்வளவு குற்றம்வேண்டுமானாலும் சுமத்தலாம். அதைப் போலவே அவருடைய மேன்மைகளை எடுத்துப்பாராட்டவேண்டுவது நமதுகடமையன்றோ? நாயக்கரின் தெய்வபக்தியும் மதஸ்வாதந்திரியமும் தளவாய்களைத்தேர்ந்தெடுக்கும் சாமர்த்தியமும், கடைசியாக அவர்கட்டுவித்த மாடமாளிகை கூடகோபுரங்களின்பெருமையும் அவர் இறந்துசென்றாலும், உயிருடனிருக்கும் அவர் தன்மையைத் தெரிவிக்கவில்லையா? பிற்கூறியவாற்றாலல்லவா திருமலைநாயக்கர் இன்றும் யாவராலும் கொண்டாடப்படுகிறார்? அவர் சக்கரவர்த்தியினிடம் பூண்ட துரோகசிந்தையாகிய ஒருகுற்றத்தை முழுதும் மறைத்து நாயக்கரின் மேம்பாடுகளையே நாம் எப்போதும் புகழ்ந்துகொண்டாடுவோமாக.

N. R. சுப்பிரமணியசர்மா,
தமிழ்ப்பண்டிதர், அமெரிக்கன் ஹைஸ்கூல், பசுமலை.

சிவமயம்.

ஆஸ்திகமணிகாள் !

இப்புத்தகமும் இன்னுஞ்சிலபிரதிகளும் திருப்பனந்தாள்மடாதிபதியவர்களிடம் ஏட்டுப்பிரதியிலிருந்ததை எடுத்தெழுதி எனதுநண்பர் நமது புத்தகசாலைக்குஅனுப்பியிருப்பதால் அதனை இதன்கீழ் விவரமாக வரைந்தனுப்பியிருக்கிறேன். சைவாபிமானிகள்யாவரும் கண்ணுற்றுக் களிப்புறுமாறுவேண்டுகின்றேன். பிற பிரதிகள் பின்னர் வெளிவரும்.

# சைவானுட்டான அகவல்

இஃது

திருவாரூர் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாசபட்டாரகரால்
அருளிச்செய்யப்பட்டது.

—:o:—

சீர்பெறுமனுதிசிவாகமப்படியே
நேர்பெறுநித்தியநியமம்புரிவோர்
கதிரவனெழுமுன்கடிகையைந்தென்ன
மதிபெறவெழுந்துமகேசனைநினைந்து
துகளறுசௌசசுத்திபுரிந்தபின்
றகைமைசேர்தந்ததாவனஞ்செய்தே
யெழுந்துநன்னதிமுதற்புனல்களினாடித்
தோய்ந்துமுன்காய்ந்ததுகிலினையுடுத்து
மூவகைத்தத்துவமுறைதனின்முக்கா
லாவதுப்புரிந்திட்டாசமனத்தையும்
அதரஞ்சுத்திசெய்தத்திரமதனு
விதயங்கொடுதொடுமிடங்களுந்தொட்டு
வைத்தவெண்ணீற்றின்மந்திரம்பதினொன்
றத்தந்தனாலபிமந்திரித்தபின்
பெருவிரலணிவிரற்பிடித்தவெண்ணீற்றாற்
சிரமுதற்பரிசனஞ்செய்தத்திரத்தா
லாசாரத்தினோடைந்திடஞ்சிரமுத

லீசானுதிகொண்டிட்டுநீறடைவினில்
அத்தகுமற்றையவங்கமெங்கணுஞ்
சத்தியோசாதந்தனணீறணிந்த
கரமிசைநீற்றைக்கழுவியபுனலின்
முரணீசானமுதலிலைந்தமைத்தபின்
சென்னியிற்றெளித்துச்சிவமந்திரத்தாற்
சொன்னவாசமனந்தொடுமிடம்புரிந்தே
மகிழ்ந்திடச்செய்வதுமானதநானம்
நிகழ்ந்திடவேகரநியாசஞ்செயும்படி
யத்திரந்தன்னலங்கைதுடைத்துச்
சத்திமந்திரத்தாற்றகைபெறக்கூட்டி
திருவுறுசிவாதனஞ்சிவமூர்த்தியினாற்
பெருவிரலிரண்டையும்பிணிக்கவுள்வைத்து
முந்துமீசானமுதலைந்தினையும்
ஐந்திடம்பெருவிரலாதியாயமைத்தே
யங்கையில்வளைத்தவங்குட்டங்கொடு
திகழ்ந்திடவித்தியாதேகமுநீத்தே
வகைதெரிநேத்திரமந்திரமதனால்
அகமுறநடுவிரலாறையுள்வளைத்துச்
சிறுவிரன்முதலாய்ச்செறிந்தநால்விரலின்
முறைதருமிதயமுதநியாசம்பணி
யத்திரமதனலங்குட்டங்களின்
மெத்தியதர்ச்சனிவிரல்களாற்றெரித்து
கவசமந்திரத்தாற்கைகளைச்சுற்றி.
யவமின்மூலத்தாலமைந்திடக்கூட்டி
யிருகரநியாசமியற்றியபின்னர்
நெருங்கியவங்கநியாசம்செயும்படி
செறிதருசிவாசனஞ்சிவமூர்த்தியினா.
நெறிதருமார்பினினியாசஞ்செய்தே.
முந்தியசிரமுதன்முழுந்தாளளவா
மைந்தலீசானமாதியைந்தமைத்தே
திருத்தகுவித்தியாதேகநேத்திரமிவை

கருத்துறுமார்பினுங்கண்ணினுமமைத்தே
யறிந்திடுமூலத்தணிவிரல்பெருவிரல்
செறிந்திடமார்பினிற்செய்துநியாச
மான்றிடுமிதயமாதிமந்திரங்கண்
மூன்றுமத்தலங்கண்மூன்றினுங்கொடுத்தே.
தவராறுபுயங்களிற்றர்ச்சனியதனாற்
கவசமந்திரங்கொடுகவசமுமமைத்தே
ஓங்கணிவிரலினுள்ளங்கைகளி
லாங்குறவத்திரமதுகொடுநசித்துத்
தக்கைத்தலங்கொடுதாளத்திரயமுந்
திக்குபந்தனமுஞ்செய்தத்திரத்தா
லாய்ந்திடுகவசத்தவகுண்டனமும்
வாய்ந்தமூலத்தான்மஹாமுத்திரையும்
அங்கணியாசமுமடைவினிற்செய்தபின்
பொங்கியமார்ச்சனம்புரிந்திடுமாறு
வாட்டமில்பதினொருமந்திரமதனு
லீட்டியபிராணுயாமமியற்றி
யாங்குறுவிந்துவினமுதிதயத்தால்
வாங்கியேபுனலின்வைத்துமூலத்தாற்
சிறந்தவத்திரத்தாற்றிக்குபந்தனமு
மறந்தருகவசத்தவகுண்டனமுஞ்
சித்திரமானதேனுமுத்திரைமஹா
முத்திரைமூலத்தானுமுடித்துக்
கலைமகள்கமலைகௌரியிங்கிவரைத்
தமலைமுச்சந்தியுந்தனித்தனிநினைத்தே
வரமிகுபதினொருமந்திரத்தப்புனல்
சிரமிசைக்கும்பமுத்திரையாற்றெளித்தே
யாசறமீளவுமப்பதினொன்முன்
மாசறுபுனலைவலக்கையில்வாங்கி
யகமுறவிடக்கையமைத்ததில்வீழ்புனல்
புகல்பதினொன்றாற்புரோக்கித்ததற்பின்
நின்றமெய்ப்புனல்வலஞ்நேர்பெறவாங்கி

நன்றிகொள்ளிடதுநாசியினிடத்தாற்
றுன்னியுட்புகுந்துதுரந்திடத்தன்பான்
மன்னியவல்வினைமைக்குழம்பெனவே
நாடியவலதுநாசிகையாற்புறத்
தோடிவீழ்ந்தெனநினைந்துற்றவப்புனலைத்
திண்ணியவச்சிரச்சிலையுருவாக
வெண்ணியவலப்புறத்தெரியிடத்துப்த்தே
கருதுமாசமனங்கரநியாசத்தொடு
நிறைதருமங்கநியாசமுஞ்செய்து
மன்னியகவசமந்திரமதனாற்
றன்னைமெய்ப்புனலாற்றகைபெறச்சூழ்ந்து
சூரியனிடத்திற்சுத்தனைநினைந்தே
சீரியகாயத்திரியுடன்மூலந்
தற்பணமும்முறைதனித்தனிசெய்தே
யற்புதசெபமீரைந்துசெய்தடைவி
லதிகமொவ்வொருக்காலருக்கியங்கொடுத்தும்
பதினொருமந்திரம்பகர்ந்துதர்ப்பித்துச்
சூரியமந்திரந்துகளறமுக்கால்
வாரியிற்றருப்பணம்வகைபெறவுதவி
மந்திரத்தேவர்வகைபெறுமிருடிகள்
அந்தமின்மனுக்களடைவுறுபூதர்க
டந்தைதாய்ஞாதிகடன்குருவிவர்க்கு
முந்தியதருப்பணமுறைமுறைசெய்தே
வேண்டியமந்திரம்வேறுசிலபல
பூண்டிருதருப்பணம்புரிந்துவிதிப்படி
தங்குமாசமனந்தரகரநியாசமும்
அங்கநியாசமுமடைவினிற்செய்தபின்
மருவியபுனலின்வைத்திடுமுதைப்
புருவநடுவினிற்பொருந்திடக்கூட்டி
மூலமந்திரமுறைபெறச்செபித்தே
சூலபாணியனைத்தொழுதடிவணங்கி
நற்புகழ்கமலைஞானப்பிரகாசன்
அற்புதமாகியவாகமப்படியே
நயவன்புடனேநவிலும்விதிப்படி
நியமம்புரிவோர்நீடுவாழ்பவரே.

---

ச்ர. மு. பஞ்சனதம்,
சரஸ்வதிவிலாசபுத்தகசாலைத்தலைவர்,
தாதம்பேட்டை பழூஉர்.

# "தமிழ் இயற்கைமொழி"*

———:(o):———

மாட்சிமைபொருந்திய தமிழ்ச்சங்கத்தாரவர்களுக்கும் சபாநாயகரவர்களுக்கும் அன்புகூர்ந்து மகிழ்கூர்ந்து வணங்குதல்செய்து தமிழ் இயற்கைமொழியென்பதைப்பற்றிச் சிறிது கூறுகின்றேன்.

இயற்கைமொழியென்பதற்கு நாவின் இயற்கைநிகழ்ச்சியின்படியுண்டானமொழியெனவும், இயற்கைப்பொருளின்வடிவமுதலியவற்றைவிளக்கும் மொழியெனவும் பொருள்கொள்ளவேண்டும்.

## நாவின் இயற்கைநிகழ்ச்சி.

உலகம் குழந்தைப்பருவமாக இருந்தகாலத்து அம்மக்கள் குழந்தைகள்போல ஒருமொழியும்பேசியறியாதவர்களானபடியால் முதல் முதலுண்டாகுமொழி அவர்கள்நாவுக்கு உச்சரிக்க எளிமையாக இருக்கும்படி சிறுசிறு சொற்களையுடையமொழியாக இருக்கவேண்டும். மொழி=பாஷை. இது சித்தர்வழக்கு. தமிழ்ச்சொற்களெல்லாம் பெரும்பான்மையும் ஓரசைச்சொற்களாகவே யிருக்கின்றன.

இயற்கையெழுத்தோசையிலிருந்துண்டான எழுத்துகளின்சார்பால் இயற்கைப்பொருளோசையிலிருந்து முதல்முதலுண்டான சொற்களெல்லாம் ஓரசைச்சொற்களேயாம்.

இயற்கையெழுத்தோசை இயற்கைப்பொருளோசைகளின் இலக்கணம் இப்பொழுது அச்சிட்டிருக்கிற மொழிநூலிற்கூறப்பட்டிருக்கின்றது.

இயற்கையெழுத்தோசை=எழுத்துகளுக்கெல்லாம் ஆதாரமான ஓசை.

இயற்கைப்பொருளோசை=அர்த்தத்துக்கு ஆதாரமான ஓசை.

இயற்கையோசையின்படியுண்டான மொழியே உலகில் முதல் மக்களுக்கு உச்சரிக்க எளிமையாக இருக்கும்.

"செயற்கையறிந்தக்கடைத்தும்உலகத்து
இயற்கையறிந்துசெயல்"—(திருக்குறள்.)

*இது மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் பதின்மூன்றும்வருஷக்கூட்டத்துக்கு வந்த உபந்யாசம்.

தொல்காப்பியமுதலிய தமிழிலக்கணங்களுள்

௧ மொழிமுதலெத்து.

௨ மொழியிறுதியெழுத்து.

௩ மயக்கம்.

௪ குற்றியலுகரம்.

௫ குற்றியலிகரம்.

௬ உடன்படுமெய்.

௭ சொல்வளர்ச்சி.

முதலியன எல்லாம் நாவின்இயற்கையின்படியே அமைந்திருக்கின்றன.

நாக்கு வளைந்து திருத்தமடைவதற்கேற்றசெயற்கையும் சிறு பான்மையுண்டு.

தண்ணீரை அதுசெல்லும் இயற்கையின்படியேகொண்டுபோய்ப் பிறகு சிறிதுசிறிதாகத்திருப்பல்வேண்டும்.

## மொழிமுதலெழுத்து.

தமிழிலும் ஆரியமுதலியவற்றிலும் மொழிக்கு முதலில்வரும் எழுத்துகளைப்பற்றிப் பெரிதும் வேறுபாடிருக்கின்றது. அதாவது:—

தமிழில் எல்லா எழுத்துகளும் மொழிக்குமுதலில் வாரா; ஆரிய முதலியவற்றில் எல்லா எழுத்துகளும் மொழிக்குமுதலில்வரும். இதற் குக்காரணம் என்ன? இந்த ஆராய்ச்சி முக்கியமாகின்றது. எழுத்து களில் இயற்கையெழுத்து, செயற்கைஎழுத்து என இரண்டுவகைகள் இருக்கின்றன.

இயற்கையெழுத்தாவது தானாக உண்டான எழுத்து.

செயற்கையெழுத்தாவது பிறகு உண்டாக்கப்பட்ட எழுத்து.

இயற்கையெழுத்து உச்சரிக்க எளிமையாக இருக்கும்.

செயற்கையெழுத்து உச்சரிக்கக்கடினமாக இருக்கும்.

உயிரெழுத்துகளும், மெய்யெழுத்துப்பதினெட்டுள் கசதநபமவய ஞங என்ற பத்தெழுத்துகளும் இயற்கையெழுத்துகளாதலால் நாவுக்கு உச்சரிக்க எளிமையாக இருக்கும்.

லரளழடணறன என்ற எட்டெழுத்துகளும் நாவுக்கு உச்சரிக்கக் கடினமாக இருக்கும். ஏனெனில் இவ்வெட்டும் செயற்கையெழுத்து கள்.

இச்செயற்கையெழுத்துகள் நாவானது வளைந்து அண்ணத்தைத் தொடலால் பிறப்பனவாகலின் அச்செயற்கையெழுத்துகளுக்கு நாவி னதுமுயற்சி மிகவேண்டியிருக்கிறது.

முதல்மக்களுக்கு அதுகடினமானபடியால் லகரமுதலிய செயற் கையெழுத்துகள் மொழிமுதலில் வாராவாயின. தேனூட்டி மருந் தூட்டுகிறதுபோல மொழிமுதலில் இயற்கையெழுத்தும் இடையில் செயற்கையெழுத்தும் வரின் நாவானது மெல்லமெல்லவளைந்து திருத்த மடையும்.

இங்ஙனமே தமிழ்ச்சொற்களெல்லாம்நடைபெறுகின்றமையின்

"பன்னீருயிரும் கசதநபமவய
ஞஙவீரைந்துயிர்மெய்யுமொழிமுதல்"

என அந்நடையின்படியே சூத்திரமும் எழுந்தது. இது தமிழ்மொழி ஒன்றற்கே சிறப்புச்சூத்திரம்.

## மொழியிறுதியெழுத்து.

வல்லின மெய்யீற்றுச்சொற்கள் உச்சரிக்கக்கடினமாதலால் முதல் மக்களுக்குக் கூடாமையாகிறது.

கொக்கு, சுக்கு எனின் எளிமையாகும்.

கொக், சுக் எனின் கடினமாகும்.

இவ்வீற்றுச்சொற்கள் தமிழில் இல்லை. ஆரியமுதலியவற்றில் இருக்கின்றன.

இதழ்குவிப்பது கடினமாகலின் குற்றியலுகரங்களுக்குச்சாரியை கூட்டிக் கொக்கின்கால் வண்டின்கால் என்பர்.

குழந்தைகள் அங்காந்துஅங்காந்து அழுதலினால்தான் அசைந்து அசைந்து பெலம்பெறுகின்றது. பிறகுதான் இதழ்குவிக்கும் ஆற்ற லுண்டாகிறது.

குழந்தைகள் மாடு, கொம்பு என்னும் குற்றியலுகரத்தை மாட, கொம்பா என்றுதான் உச்சரிக்கும்.

## மயக்கம்.

மயக்கமாவது கூட்டம். அதாவது ஒருபதமாவதற்கு எந்த எழுத்தோடு எந்த எழுத்தைக்கூட்டினால் உச்சரிக்க எளிமையாக இருக்கும்என ஒலிவடிவின் இயற்கையிலக்கணம் அறிந்து செய்வது, பிறப்பிடத்தால் ஒத்திருக்கவேண்டும். அது—உயிர்மயக்கம், மெய்ம் மயக்கம் என இரண்டாம். மெய்ம்மயக்கம்—உடனிலைமெய்ம்மயக்கம் வேற்றுநிலைமெய்ம்மயக்கம் என இரண்டாம். சுலா நிலா நிலம் முதலியன உயிர்மயக்கச்சொற்களாம். அப்பன் அம்மை அக்கை முதலியன உடனிலைமெய்ம்மயக்கச்சொற்களாம்.

கங்கன் அம்பு வண்டு முதலியன வேற்றுநிலைமெய்ம்மயக்கச் சொற்களாம்.

சுலா நிலா முதலிய உயிரெழுத்தோடு உயிரெழுத்துக் கூடும் உயிர் மயக்கச்சொற்கள் உச்சரிக்க எளியனவாம்.

அப்பன் அம்மை முதலிய தம்மொடுதாமேமயங்கும் உடனிலை மெய்ம்மயக்கச்சொற்கள் உயிர்மயக்கச்சொற்கள்போல எளியனவாகா.

கங்கன் அம்பு முதலிய தம்மொடு பிறவேமயங்கும் வேற்றுநிலை மெய்ம்மயக்கச்சொற்கள் உச்சரிக்கச்சிறிது கடினமாகும்.

கல்மலை யெனின் நாவுக்குக்கடினமாகும்.

கன்மலை யெனின் நாவுக்கு எளிமையாகும்.

என்எனில் லகரமும் மகரமும் மயங்காது.

னகரமும் மகரமும் மயங்கும்.

மயங்காதன நாவுக்குக் கடினமும், மயங்குவன நாவுக்கு எளிமையு மாகும். தமிழ்ச்சொற்களும் சொற்றொடர்புகளும் இந்நடைபெற் றுள்ளன.

பத்மம் எனின் நாவுக்குக் கடினமாகும். ஏன்? தகரமும் மகர மும் மயங்காது; ஒன்றுபடாது. பதுமம் எனின் எளிமையாகும்.

சக்தி, புஸ்தகம், சப்தம், அத்புதம், கல்பம், சுக்லம், வக்ர முதலி யன எல்லாம் மயங்காதனவாம். இந்நடை நாக்குமுதிர்ச்சிபெற்றபின் உண்டாயின.

மயங்குவன இயற்கையுச்சரிப்பெனவும் மயங்காதன செயற்கை யுச்சரிப்பெனவும் அறிந்துகொள்ளவேண்டும.

அப்பன், கங்கன் முதலியன இயற்கையுச்சரிப்பாம். சக்தி புஸ் தக முதலியன செயற்கையுச்சரிப்பாம். தமிழிலக்கணத்துள் மயக்க விதிக்குக்கூறும் இலக்கணமெல்லாம் இயற்கையுச்சரிப்பாகவே இருக் கின்றன. முதல்முதலுண்டான ஓரசைச்சொற்களும் இயற்கையுச் சரிப்பாகவேயிருக்கின்றன.

தமிழில் மொழிமுதலில் நாவுக்குக்கடினமாகிய லகர ரகர முதலிய செயற்கை யெழுத்துகள் வாராமையானும், நாவுக்குக்கடினமாகிய வல் லினமெய்யீற்றுச்சொற்கள் இல்லாமையானும், முதற்சொற்களெல் லாம் ஓரசைச்சொற்களாகவே இருக்கின்றமையானும், அவ்வோரசைச் சொற்களும் நாவின் இயற்கையின்படியே இருக்கின்றமையானும், மற் றும் பலகாரணங்களாலும் தமிழ் உலகம் குழந்தைப்பருவமாயிருந்த காலத்து உண்டான இயற்கைமுதன்மொழியென்பது துணியாநின் றது.

குழந்தைகள் பேசும்போது கவனித்துக்கொண்டேவரின் மேற் சொன்ன இலக்கணங்களெல்லாம் விளக்கமாகும். ராமன் என்னும் பெயருடைய ஓர் சிறுவனை மற்றைய சிறுவர்கள் அவரவர் நாவன்மைக் குத்தக்கபடியும் வயதுக்குத்தக்கபடியும் ஆமாஎன்றேனும் லாமா வென்றேனும் ராமாவென்றேனும் அழைத்தல்கூடும். ராமஃ என் றும் விசர்க்கவுச்சரிப்புச் சிறுவர்களுக்கு வாராது. கற்றுப் பழகிய நாவுக்கே வரற்பாலது.

## "தமிழின் முதிர்ச்சி"

உலகம் குழந்தைப் பருவமாக இருந்தகாலத்துண்டான எழுத் தும், சொல்லும், சந்தியுமேயல்லாமல் உலகம் முதிர்ந்தபருவம் அடைந்தகாலத்துண்டான எழுத்தும், சொல்லும், சந்தியும் தமிழி லிருக்கின்றன.

## ௨ - ம்.

### குழந்தைப்பருவம்.

க. எழுத்து - அ ஆ இ ஈ உ ஊ எ ஏ, க ங ச முதலியன.

௨. சொல் - சுலா நிலா அப்பன் கோ ஓ முதலியன.

௩. சந்தி - மர × அடி = மராடி; மண்பானை முதலியன.

### முதிர்ந்த பருவம்.

க. எழுத்து - ஐ ஔ, ள ழ ட ண ற ன.

௨. சொல் - சூற்றம் காட்சி சூழ்ச்சி பட்டம் முதலியன.

௩. சந்தி - மட்பானை பொற்றூலி முதலியன.

### சொல்.

தமிழ்ச் சொற்களெல்லாம் காரணச் சொற்களேயாம். இடுகுறிப் பெயர் ஒன்றேனும் இல்லை. தொல்காப்பியர் கருத்தும் அது.

### இயற்கை வடிவம்.

இயற்கை வடிவம் திரட்சியாம். இயற்கைப் பொருள்களெல்லாம் அவ்வடிவமாகவே அமைந்திருக்கின்றன.

திரட்சியினின்று வட்டமும் வட்டத்தினின்று வளைவும் உண்டாம்.

இனிப் பொருள்நிமித்தம் சொல்லாகலின் அச்சொல், அப் பொருளின் இயற்கை வடிவத்தையாவது இயற்கைக் குணத்தையாவது இயற்கைச்செயலையாவது உணர்த்தல்வேண்டும். அது பிரத்தியட்சப்பிரமாணத்தோடிருக்கவேண்டும். பிரத்தியட்சப்பிரமாணமே புலவர்களுக்குமே ஊக்கம் தருவது. அநுமான முதலியன வெல்லாம் பிரத்தியட்சப் பிரமாணத்திலிருந்தேயுண்டாகின்றன.

க. உலகம் எப்படியிருக்கின்றது? திரண்ட வடிவமாக இருக்கின்றது. உலகத்தையுணர்த்தும்சொல்லிலும் அந்த அர்த்தம் இருக்க வேண்டும்.

உலகமென்பதற்குத் திரண்ட வடிவுடையதென்பதே பொருள்.

உலம் - உலகம். உலம்=திரட்சி.

உலம் - உலக்கை, திரண்டிருப்பது.

"நிலந்தீ நீர்வளி விசும்போடைந்தும் கலந்த மயக்கம் உலகமாக லின்" என்பர் தொல்காப்பியர். (மரபியல்) "காலம் உலகமென்பன வடசொலன்று" என்பர் நச்சினார்க்கினியர், உலமென்பதற்கும் ஓர் முதற் சொல் உள்ளது.

௨. கொடிகள் எப்படி படர்கின்றன? வளைந்து வளைந்து படர்கின்றன. கொடியை யுணர்த்தும் சொல்லிலும் அப்பொருளிருக்க வேண்டும்.

கொடு - கொடி. கொடு=வளை.

௩. வழி எப்படி போகின்றது? வளைந்து வளைந்து போகின்றது. வள் - வழி. வள்=வட்டம், வளைவு, ளகரம் ழகரமாகும்.

௪. நெருப்பு இயல்பாக எதில் உண்டாகிறது! மூங்கிலில் உண்டாகிறது.

நெருப்பையுணர்த்தும் சொல்லிலும் அப்பொருளிருக்கவேண்டும். நெல் - நெருப்பு. பு - விகுதி. நெல் - மூங்கில். நெல்வேலி என்பதற்கு வேணுவனமென்பது பொருள்.

கண் - கணம்=நெருப்பு. மூங்கிலிலுண்டாவது.

கண்=மூங்கில்.

கணப்பு - கணப்புச்சட்டி,=நெகிடிச்சட்டி,

கணம் - கனல்=நெருப்பு. ணகரம் னகரமாகும்.

முளரி=நெருப்பு. முளம் - முளரி. மூங்கிலிலுண்டாவது,
முளம்=மூங்கில்.

அரி=மூங்கில், நெருப்பு. மூங்கிலிலுண்டாவது.

தட்டை=மூங்கில், நெருப்பு, ,,

முதல்மக்கள் நெருப்பு இன்னதென்பதை இயல்பாக மூங்கில் எரிவதால்தான் அறிந்துகொண்டார்கள்.

௫. தென்னை பனை கரும்பு சோழம் நாணல் கொறுக்கை கம்பு தினை நெல் புல் முதலியன எல்லாம் மூங்கிலினமாகலின் தென்னை முதலியவற்றையுணர்த்தும்சொல்லிலும் அப்பொருளிருத்தல்வேண்டும்.

நால் - நாலி=தென்னை. மூங்கிலினமென்பது.

நால்=மூங்கில். (போகர் - நி)

நாலி - நாளீ=தென்னை. (ச - தே)

பணை=மூங்கில், பனை. மூங்கிலினமென்பது.

"சடசடவிருபெணை" (சு - தே)

பணை பனையாயிற்று. பணை - பெணை.

பெணை - பெண்ணை=பனை.

வேழம்=மூங்கில், கரும்பு, கொறுக்கை, மூங்கிலினமென்பது.

நெல் மூங்கில். நெல். ,,

புல்=மூங்கில், புல். ,,

வமசம்=மூங்கில், பிரம்பு. மூங்கிலினமென்பது.

மூங்கிலிலே நெடுக்கு=நரம்புடையது. அதுபோல்வனவெல்லாம் மூங்கிலினமென்பது.

சா. உப்புச்சுவை இயல்பாக எங்கிருக்கின்றது. கடலில்.

கலிப்பு - கரிப்பு. கலி=கடல்.

எ. அசைவென்பது எப்பொழுதும் இயல்பாக எங்கிருக்கின்றது கடலில்.

ஆலம் - ஆலல். ஆலம் செடல்.

அலம் - ஆலம். அலம். அலம் கெடல்.

அலம் - அளம்=உப்பளம்.

இங்ஙனம் போதிப்பது முதற்போதம்.

முளையென்பது வித்தின்நடுவிலேயுண்டாகின்றது. குருத்தும் மரத்தின் நடுவிலே யுண்டாகின்றது. கருவும் சரீரத்தின் நடுவிலே யுண்டாகின்றது. முதல்முதல் மக்கட்படைப்பு உலகின் நடுவிலே தான் உண்டாயிருத்தல்வேண்டும். அந்நடுவிடமும் - மலையும், மூங்கிற் காடும், வெப்பமும், பொன்சத்தும் செம்பின்சத்தும் தைலசத்தும் உள்ளனவாக இருக்கவேண்டும்.

சூரியன்மையவரிக்கு உட்பட்டது நடுவிடமாகும்.

மையவரி=கிரட்சரேகை.

இவையெல்லாம் மொழிநூலில் விளக்கப்பட்டுள்ளன. மொழி நூல் ஆராய்ச்சி தொடங்கி உ௫-வருடங்களாகின்றன. அவ்வாராய்ச்சி மேலும் மேலும் நடைபெற்று வருகின்றது.

திருவருளால் முற்றுப்பெறுக.

---

இங்ஙனம்,
தமிழபிமானிகளின் வழி வழி உழுவலன்பன்,
மாகறல், கார்த்திகேயன்,
கண்டி, சென்னை.

௨

சிவமயம்.

# "மெய்புணர்தல்".*

——:(o):——

தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் அருளிச்செய்த திருக்குறளில் "மெய்யுணர்தல்" என்பது ஓரதிகாரம். அவ்வதிகார ஆராய்ச்சியே ஈண்டெடுத்துக்கொள்ளப்பட்டது. மெய்யுணர்தல் என்னும் சொற்றொடரின்பொருள் மெய்யான் உணர்தல் என்பதாம்; எனவே உணர்வு பலவேறுவகைப்படுமென்பது விளங்கும். இன்றேல்

*இது மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் பதின்மூன்றாம்வருஷக்கூட்டத்தில் வாசிக்கப்பெற்றது.

மெய்யென அடைகொடுத்துக்கூறவேண்டாம். உணர்வு எத்தனை வகைப்படுமெனின் நிருவிகற்பஉணர்வு, சந்தேகவுணர்வு, விபரீத உணர்வு மெய்யுணர்வென நால்வகைப்படும். அவற்றுள், ஒருபொருளை யாதோவொன்று தோன்றுநின்றதெனவுணர்தல் நிருவிகற்பவுணர்வு, அப்பொருளைக் கட்டையோ,கள்வனோவெனவுணர்தல்சந்தேகவுணர்வு. கட்டையைக் கள்வனென்றுவது கள்வனைக் கட்டையென்றுவது உணர்தல் விபரீதவுணர்வு, கட்டையாயிற் கட்டையென்றும் கள்வனாயிற் கள்வனென்றும்உணர்தல் மெய்யுணர்வு.

இனி, உணர்தல்என்றதனால் உணரப்படும்பொருளும், உணரும் கருத்தாவும் உண்டெனவிளங்கும். அவற்றுள் உணருங்கருத்தா உயிராம்; உணரப்படும்பொருள் அறம், பொருள், இன்பம், வீடென நான்காம். ஆகவே அந்நான்குபொருளினையும் ஐயவிபரீதக்குற்றமின்றி உள்ளவாறுணர்தல் மெய்யுணர்தலென்று கூறலாமாயினும், அவற்றுள், அறம், பொருள், இன்பமாகியமூன்றும் நிலைபேறின்றி மாறுதலடையுமாதலின் அவற்றையுணரும்உணர்வும் மாறுதலடைந்து மெய்யுணர்தலென்னும் பெயரைப்பெறமாட்டாது. பொருள், இன்பங்கள் மாறுதலடையுமெனின், செய்யுங்கால் நல்வினையென்றும், பலனுக்குவரும்வரைப் புண்ணியமென்றும், பலனாகவருங்கால் இன்பமென்று மாறுதலடையுமென்க.

இனி, வீடென்பது விடுதல் என்னுஞ்சொல்லின் "தல்" விகுதி குறைந்து முதல்நீண்டு "வீடு" என்றுயிற்று. உயிர் யாதானுமொன்றைப்பற்றி அதுவாய்நிற்பதின்றி தனித்துநில்லாதாதலின் விடுதல் என்றதனால் பிறிதொன்றனைப் பற்றுதலுண்டென்பது அருத்தாபத்தியால் விளங்கும்; விளங்கவே, அறம், பொருள், இன்பங்களாகிய உலகப்பொருள்களை விட்டு,கடவுட்பொருளையுணர்தல் வீட்டுணர்வெனப்படும். இக்கருத்துப்பற்றியே 'துறவு' என்னும் அதிகாரத்தின்பின், 'மெய்யுணர்தல்' என்னும் அதிகாரம் வைக்கப்பட்டது. 'பரனைநினைந்திம் மூன்றும்விட்டதேபேரின்பவீடு' என்று ஔவைப்பிராட்டியாரருளிச்செய்த திருவாக்கும் இதனையே வலியுறுத்தும். கடவுட்பொருள் எக்காலத்து மாறின்றி ஒருதன்மைத்தாய்விளங்கு மெய்ப்பொருளாதலின், இப்பொருளை ஐயவிபரீதக்குற்றமின்றி உண்மையானுணர்தலே மெய்புணர்தலெனப்படும். ஆதலினாற்றான் இம் மெய்யுணர்தலென்னும்

அதிகாரத்தைத் துறவறத்துள் ஞானப்பகுதியுள்வைத்தும், ஏனை அறம், பொருள், இன்பங்களாகிய உலகப்பொருள்களை உள்ளவாறுணரும் உணர்வை "அறிவுடைமை" என்னும் பெயரால் பொருட்பாலின் வைத்துங் கூறுவாராயினர்.

ஆசிரியரருளிச்செய்த ஒவ்வொரு அதிகாரமும் பத்துப்பாட்டுகளால் முற்றுப்பெற்றிருக்கின்றது. அப்பத்துப்பாட்டும் ஒன்றன்பின்னொன்றாய் வைக்கப்பட்டிருக்கும்நோக்கம் மிகக் கவனிக்கத்தக்கதொன்றும். ஆதலின் மெய்புணர்தலென்னும் அதிகாரத்தினுள்ள பத்துப் பாட்டுகளையு முறையே ஆராய்வாம்.

மெய்புணர்தலென்ற அதிகாரப்பெயரினாலேயே, பொய்புணர்தலுமுண்டெனப்பட்டு, அவ்விருவகை உணர்வினாலும் உணரப்படும் பொருள்கள் இருவகையெனவிளங்குமன்றே. அவற்றுள், பொய்புணர்வினால் உணரப்படும்பொருள் பொய்ப்பொருள்; மெய்புணர்வினால் உணரப்படும்பொருள் மெய்ப்பொருள். பொய்ப்பொருளென்பது இல்லாத சூனியத்தைக்குறித்ததன்று; நிலைபேறின்றி தோன்றியழியுந் தன்மையுடைய பொருளைக்குறிப்பதாம். அதுவே மேற்கூறிய அறம், பொருள், இன்பங்களாம். அறமும் பொய்ப்பொருள்களோடு ஒப்ப நீக்கத்தக்கது தானோவெனின் பிறப்பிறப்பை உண்டுபண்ணுதலில் ஏனைப்பொருளின்பங்களோடு அறமுமொத்தலின் நீக்கத்தக்கதேயாம். இக்கருத்துப்பற்றியே "இருள் சேரிருவினையுஞ்சேரா" என ஆசிரியர் தாமே யருளிச்செய்வாராயினர். மெய்ப்பொருள் என்பது தோன்றி அழியாத நிலைபேறுடைய பொருளைக்குறிப்பதாம். குறிக்கவே, நிலைபேறின்றிய பொய்ப்பொருளுணர்வால் உண்டாம் பயன்யாதுஎன்னும் ஐயத்தை நிவிர்த்தித்தற்பொருட்டு அவ்வுணர்வால் உண்டாம்பயன் பிறவித்துன்பமென உணர்த்துதற்கு

'பொருளல்லவற்றைப்பொருளென்றுணரு
மருளானாணப்பிறப்பு' என்னும் முதற்பாட்டை அருளிச்செய்தார்.

செய்யவே, மெய்ப்பொருளாகிய வீட்டுணர்வுயாது? அவ்வுணர்வினாலுணரப்படும் பொருள்யாது? உணர்தலாலுண்டாம் பயன்யாது? என்னும் ஐயம் நிகழுமன்றே. அந்நிகழ்ச்சிபற்றி மயக்கத்தைத்தருகின்ற

அஞ்ஞானமில்லாத உணர்வே வீட்டுணர்வு எனவும், அவ்வுணர்வானு ணரப்படும்பொருள் நிரதிசயவின்பமாகிய கடவுட்பொருளெனவும், அதனை உணர்தலானுண்டாம் பயன் இருளாகிய ஆணவமலநீக்கம் எனவுந்தோன்ற

'இருள்நீங்கியின்பம்பயக்குமருள்நீங்கி
மாசறுகாட்சியவர்க்கு' என்னும் இரண்டாம்பாட்டை அருளிச்செய் திருக்கின்றார்.

இனி வீட்டுணர்வாகிய மெய்யுணர்வு எவ்வாறு உண்டாகுமென் னும் ஐயம் நிகழுமன்றே. அந்நிகழ்ச்சிபற்றி மெய்யுணர்வை உண்டு பண்ணும் சமயநூல்கள் பலவாதலானும் அவையெல்லாந் தத்தங் கொள்கைகளையே பெரிதெனக்கூறுமாதலானும் அவற்றுள் இது உறு தியோ, அதுவுறுதியோ என்னுஞ் சந்தேகமின்றி உறுதியாயுள்ளதை யுறுதியெனத்துணியும் அறிவால் மெய்யுணர்வு உண்டாமென்பது தோன்ற

'ஐயத்தினீங்கித்தெளிந்தார்க்குவையத்தின்
வானநணியதுடைத்து' என்னும் மூன்றாம்பாட்டை அருளிச்செய் வாராயினர்.

சந்தேகநீங்கிய மெய்யுணர்வால் வீட்டுணர்வு உண்டாகுமென்று கூறவேண்டாம்; புறத்துவிடயங்களை உணரும்மனத்தைஅகத்துத்திருப்பி ஒருகுறிப்பில் நிறுத்திக்கொள்ளுதலால் வீட்டுணர்வுண்டாமென்ன லாமோவெனின் மனமடக்கம் மெய்யுணர்தலுக்குச் சாதனமேயன்றி மெய்யுணர்வன்றெனவும் அதனால் மெய்யுணர்தல் சித்தியாதெனவுந் தோன்ற

'ஐயுணர்வெய்தியக்கண்ணும்பயமின்றே
மெய்யுணர்வில்லாதவர்க்கு' என்னும் நான்காம்பாட்டு அருளிச்செய் யப்பட்டிருக்கிறது.

இனி, மெய்யுணர்வின் இலக்கணந்தான் என்னையென்பார்க்கு காரி யப்பொருளாய்க்காணப்படும் எல்லாப்பொருள்களையுங்காணுந்தோறும் அப்பொருள்களின் காரணத்தை ஆராய்ந்து காரியத்தைக்காரணத்து ளொடுக்கி அக்காரணத்திற்குங்காரணமாய் தனக்கொருகாரணமில்லாத முதற்பொருளையுணர்தல் மெய்யுணர்வினிலக்கணமென்றுணர்த்து தற்கு

'எப்பொருளெத்தன்மைத்தாயினுமப்பொருண்
மெய்ப்பொருள்காண்பதறிவு' என்னும் ஐந்தாம்பாட்டை அருளிச்செய்தார்.

செய்யவே, அம்முதற்பொருளை யுணர்தற்குச் செய்யவேண்டுவதான வுபாயம் யாதோவென்பார்க்கு அவ்வுபாயம் கேட்டல், சிந்தித்தல், தெளிதலென மூத்திறப்படுமெனவும் அவற்றுள் கேட்டல் சற்குருவினிடத்தில் கேட்குமுபதேசமாமெனவும் தோன்ற

'கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி' என்னும் ஆருவது பாட்டினையும்,

சிந்தித்தலாவது கேட்ட வுபதேசப் பொருளில் மனம் நிலைக்கும்படி அப் பொருளைப் பிரமாணங்களினாலும் யுக்தியினாலும் ஆராய்தலென்பது தோன்ற

'ஓர்த்துள்ள முள்ளதுணரி னொருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு' என்னும் ஏழாவது பாட்டினையும்,

தெளிதலாவது உபதேசத்தி லுறைத்து நிற்றலால் அஞ்ஞானம் நீங்க மெய்ஞ் ஞானத்தால் கடவுட்பொருளைக்காண்டல் என்பது தோன்ற

'பிறப் பென்னும் பேதைமை நீங்கச் சிறப் பென்னுஞ்
செம் பொருள் காண்ப தறிவு' என்னும் எட்டாவது பாட்டினையும் அருளிச்செய்தார்.

மெய்ப் பொருளைக் காண்டலாவது அப்பொருளோடு கலந்து நிற்றலை உணர்தலேயாம். இதுவே ஆசிரியர் கருத்தென்பது பேதைமை நீங்கச் செம்பொருள் காண்பது என்றதனாலேயே இனிதுவிளங்கும். இவ்வாறு கேட்டல் முதலிய மூன்று உபாயத் தானும் பரம்பொருளைத் தரிசித்தவிடத்தும் 'பிராரத்ததேகம் உள்ளளவும் அத்தேசத்திற்குரிய இன்ப துன்ப அனுபவத்தின்பொருட்டு நிட்டையினின்றும்பிரிந்து உலகத்தைநாடவரும். வரவே, இன்ப துன்பங்களுளவாம். அவற்றால் பிறப் பிறப்பாகிய துன்பத்திற்கு ஏதுவாகிய வாதனை உண்டாகாதோ என்பார்க்கு ஞானயோக முதிர்ச்சியுடையவரைப் பிராரத்த வாதனை தாக்காதென்பது தோன்ற

'சார் புணர்ந்து சார்பு கெட வொழுகின் மற்றழித்துச்
சார் தரா சார் தரு நோய்' என்னும் ஒன்பதாம் பாட்டு அருளிச்செய்தார்.

செய்யவே நிட்டையினின்றும் நீங்கி வெளியேவந்து தேகத்தைப் பற்றியிருந்தும் வாதனை தாக்காதிருத்தற்கு காரணம் என்னை என்பார்க்கு வாதனையாகிய இன்ப துன்பமென்னுங் காரியத்திற்குக் காரணமாகிய விருப்பு வெறுப்பும், அவ்விருப்பு வெறுப்புக்குக் காரணமாகிய அஞ்ஞானமு மில்லாமையால் பிராரத்த வாதனை தாக்காதென்பது உணர்த்துதற்கு

'காமம் வெகுளி மயக்க மிவை மூன்றி
னாமங் கெடக் கெடு நோய்' என்னும் பத்தாவது பாட்டு அருளிச் செய்யப்பட்டது. மேலாசங்கை யின்மையின் அதிகாரம் பூர்த்தியாயிற்று.

இங்ஙனம்,
பொ. முத்தையப் பிள்ளை,
தூத்துக்குடி.

ORIENTAL MANUSCRIPTS LIBRARY NOV 1957 MADRAS

# மாணிக்கவாசகர்காலவாராய்ச்சி.*

———:O:———

இன்பம்பெருக்கியிருளகற்றியெஞ்ஞான்றுந்
துன்பந்தொடர்வறுத்துச்சோதியா—யன்பமைத்துச்
சீரார்பெருந்துறையானென்னுடையசிந்தையே
யூராகக்கொண்டானுவந்து. —திருவாசகம்.

செந்தமிழ்ச்செல்வம் செவ்வனேபொருந்திய சீரியர்காள்! ஆதிசிர் பரவும் வேதியனாகிய வாதவூரண்ணல்மலர்வாய்ப்பிறந்த திருவாசகத்தின் தீஞ்சுவைப்பெருக்கும், அருளும், உருக்கமு மறியார்யாரே! சிவப்பிரகாசமுனிவர்.

"திருவாசகமிங்கொருகாலோதிற்
கருங்கன்மனமுங்கரைந்துகக்கண்கள்
தொடுமணற்கேணியிற்சுரந்துநீர்பாய

*இது மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் பதின்மூன்றும்வருஷக்கூட்டத்தில் வாசிக்கப்பெற்றது.

மெய்மயிர்பொடிப்பவிதிர்விதிர்ப்பெய்தி
யன்பாலுருகுனரன்றி
மன்பதையுலகில்மற்றையரிலரே" என்றும், திருவருட்பாப் பாடிய இராமலிங்கஸ்வாமிகள்.—

"வான்கலந்தமாணிக்கவாசகநின்வாசகத்தை
நான்கலந்துபாடுங்கானற்கருப்பஞ்சாற்றினிலே
தேன்கலந்துபால்கலந்துசெழுங்கனித்தீஞ்சுவைகலந்தென்
னூன்கலந்துவுயிர்கலந்துவுவட்டாமலினிப்பதுவே."

என்றும், அடங்காவியப்புடன் திருவாசகத்தைப் புகழ்ந்தேத்தினராயின் என்போலியர் அவ்வருள்நூலினருமையைத் துதித்தலும் அடாமை யன்றோ! மாணிக்கவாசகரின் அருள்நிறைந்த திருவாக்கு மன்னுயி ருய்ய வித்தென்னாடதனில் தோன்றுதொட்டுக் கருங்கன்மனமுங் கரைந்திடக் கானஞ்செய்துவருமகிமைபெற்றதென்பது பண்டிதர் களும், பாமரர்களும் ஒப்பும் விஷயம். ஆனால், வாதவூரடிகள் ஆதி நாதனைநினைந் தோதியவாசகம் இற்றைக்கு இவ்வளவு காலத்திற்குமுன் அவ்வடிகளது திருவாயினின்று தெள்ளமுதின்பிரவாகம்போற் பெருகிய தென்று ஐயமறக்கூறுவாரின்னுங்கண்டிலம். இச்சிவஞானச்செல்வர் காலம் ஓர் பெரியதர்க்கவிஷயமாகவே முடிந்திருக்கின்றது. இன்னவர் காலத்தை வரையறுக்கப்புகுந்த வித்வசிகாமணிகள் பலரே. ஆனு லொவ்வொருவர்கொள்கையும் ஏனையோர்கருத்திற்கு வேறுபட்டு அவர் தம்முள் மாறுபட்டாராயிருத்தல் தமிழ்நாட்டுப் புராதனசரித்திர வாராய்ச்சியின்பாலுழைப்போர் யாவர்க்கும் திகைப்பைவிளைவிக்கும். கிருஸ்துபிறப்பதற்குமுன் முதல்நூற்றாண்டினிடைப்பட்டகாலமுதல் கிருஸ்துபிறந்து 14-வதுநூற்றாண்டுவரை மாணிக்கவாசகரின்காலத்தை முன்னும் பின்னும் அவரவர்களின் யுக்திக்கிணங்கச் சரித்திரவாராய்ச்சி செய்யப்புகுந்தார் தள்ளிவருகிறார்களாகையால் அவர்களின் அபிப் பிராயங்களுள் தழுவுவனதழீஇத் தவிர்வனதவிர்தல் முறையாதல்பற்றி அவை யீண்டுச்சற்றுலோசிக்கற்பாலன.

---

(இன்னும் வரும்.)

கே. ஜி. சேஷையர்.